தென்மொழி

மீட்போம், தமிழ்நாடு!

அன்புத்தமிழ்த் தாய்மொழியை
அழிவடவர் சீர்குலைக்க
முன்பிருந்தே இந்திபுக
விட்டார்! — உளத்
தென்புடனே நாமெழுந்தால்
கெட்டார் !

பண்டைத்தமிழ்த் தாயினத்தைப்
பார்ப்பும் சேர்ப்பும் அடிப்படுத்தும்!
அண்டை அயல் நாடுகள் பார்,
தம்பி! — வெறுங்
கொண்டைகளா, நாம்?எழுக
நம்பி !

நல்லதமிழ்த் தாய்நிலத்தை
நாயும்பேயும் ஆட்சிசெய்யும் !
வெல்லுதற்கே நாம்முனைதல்
வேண்டும்! — வேறு
சொல்லுதற்கே யாதுளது,
மீண்டும் ?

காலம்,இடம் தேர்ந்துவிட்டோம்;
களத்திறங்க எண்ணிவிட்டோம்!
கோலங்கொள்வாய் வீறுறுதி
யோடு! — வெற்றி
ஓலமிடு! மீட்போம்,தமிழ்
நாடு !

சுவடி : 21
ஓலை : 7

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
1-25

Scanned with CamScanner

நமக்கு வந்த மடல்கள்.

0: 1073 : பேரன்பின் இனிய தமிழ் நலஞ்சான்ற ஐயா,

வணக்கம்! தென்மொழியில் திருவள்ளுவரின் திருவுருவம் — ஆசிரியவுரை — தமிழ்நிலம் கட்டுரைகள் மிகவும் சிறப்பு. இங்கு தொழிலகப் பகுதிகளில் திரு. மூகுந்தன் அவர்களின் கூட்டம்பற்றி பல்வேறு வகையான கருத்துகள்-நம் தொடர்பான கருத்துகள் நிரம்பப் பேசப்படுகின்றன. அன்புடன் தங்களின்,

— குழந்தை. ஈகவரசன், திருச்சி-14.

0: 1074 : ஐயா, வணக்கம். தென்மொழி, சுவடி. 21 ஓலை-5 கண்டேன். இந்தி எதிர்ப்பு வகுப்புரிமை, மண்டல்குழு, கச்சத்தீவு, சமசுகிருத வல்லாண்மை, தமிழீழம் இவற்றிற்கெல்லாம் மாநாடு தேவையில்லை, பேரணி தேவையில்லை! இவை எல்லாம் உங்கள் பார்வையில் தேவையில்லாதவை — ஆனால் திருவள்ளுவர் படம்- அதுமட்டும் மிக மிகத் தேவை! கொண்டை இப்படி இருந்தாலென்ன — அப்படி இருந்தாலென்ன? அதனையும் நீங்கள் அணி திரண்டு, போர்முரசு கொட்டிப் போராடிய பின்பு ஒட்டு மொத்தமாகத் தனித் தமிழ்நாட்டை வாங்கிய பின்பே பார்த்துக் கொண்டாலென்ன? எவை-எவை மூகாமையே? அவை-அவை அப்போது நடக்கத்தானே வேண்டும்? ஏனிந்தக் குழப்பம் உங்களிடம்? எந்த ஈகரணிபத்தையும் முன்நிறுத்தாமல் தனிநாடு போராட்டம் எபபடிவரும்?

— இலால்குடி. க. நாகராசன், திருச்சி-14

0: 1075 : அன்புசால் தமிழய்யா பெருந்தகையர்கட்கு, வணக்கம்

தாங்களே கைப்பட வரைந்த மடல் கிடைக்கவே நான் அடைந்த அளவிலா மகிழ்ச்சியை என்னென்று எழுதுவேன்.

நந்தம் தமிழ் நாட்டின் கண்ணே, தமிழில் தேர்ந்த புலவர் பெருமக்கள், பண்டாரகர்கள், பலவாயிரமாக உளராயினும் — 'தனித்தமிழ்', என்னும்போது இற்றைக்குத் தாங்களே முன்னணியினராய்த் திகழ்கின்றீர்கள்.

கால்நூற்றாண்டுகட்கு மேலாகப் பொருட் பேரிழப்பு-எண்ணிலடங்கா இன்னல் — இவற்றிற்கிடையே தமிழ், தமிழர் நலம் ஒன்றைமட்டுமே கரணியமாய்க்கொண்டு தாங்கள் தென்மொழி'த் தாளிகையைத் தொடர்ந்து நடத்தும் துணிவை எண்ணுந்தோறும், தமிழையும், தமிழர்களையும் பண்டப்பொருள் ஆக்கி வயிற்றுப் பிழைப்பு நடத்துவோரையும், உறுபொருள் சேர்த்துச் செல்வோராய் உள்ளோரையும் அடக்கிய தமிழகத்தில் தமிழ், தமிழர் மேம்பாட்டிற்கு உண்மையாய் உழைக்கும் தமிழர் தலைவராக தாங்கள் ஒருவரே உளர் என்பது எனது துணிவாம்.

ஐயா, நான் நெடுநாள் வறியன்; எனினும் தமிழ்வெறியன். என்றால் திங்கள் தோறும் வெளிவரும் தென்மொழி, தமிழ்ச்சிட்டு கிழமை இதழாம் தமிழ் நிலம் ஆகியவற்றைத் தவறாது தொடர்ந்து பொருள் மிடைக்கிடையேயும் வாங்கிப் படித்துப் பயனடைய முடிந்ததேயொழிய, என்றால் தென்மொழி வளர்ச்சிக்கு என்று

(தொடர்ச்சி அட்டை 3-அம் பக்கம்

Scanned with CamScanner

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன் னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

பரப்பாளர்கள் : தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசு. ஆர். பிரான்சிசு, தென்மொழி கா. இளமுருகன்

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி:21] உ௦கரு மேழம் — (ஏப்ரல்-மே-85) [ஓலை-7

இந்திய அரசு, தன் நாட்டு மக்கள்-மீதே போர் தொடுக்கிறது!

இந்திய அரசு, தன் நாட்டு மக்கள் மீதே போர் தொடுத்துக் கொண்டிருக்கிறது. மக்களின் உண்மையான உரிமை எழுச்சிகளை அடக்கவும், ஒடுக்கவும், முறியடிக்கவும், அதில் அவர்களை வெற்றி கொள்ளவும், போர் முயற்சிகளைக் கடுமையான கொடுமையான கருப்புச் சட்டங்கள் வழியாகவும், போர், படைத்துறைகளை ஏவிவிட்டும், காவல் துறையைக் கட்டவிழ்த்து விட்டும், மக்களை அடித்தும், நொறுக்கியும், வன் கொடுமைச் சிறையிலிட்டும், சுட்டுப் பொசுக்கியும் அழித்துக் கொண்டுள்ளது.

இது மிகவும் கொடுமையானது; அரக்கத்தனமானது; குடியரசுக்
கோட்பாட்டுக்கே முரணானது; அம் முறைக்கே உலைவைப்பது.

ஒப்போலை முறையில், அதுவும் பணமூட்டைகளையும், படை,
காவல் துறைகளையும் வைத்துக்கொண்டு, மக்களைக் கவர்ச்சியான
உறுதிமொழிகளால் ஏமாற்றியும், விளம்பரங்களால் எற்றியும்,
அவை செல்லுபடியாகாத விடத்தில் மக்களை மிரட்டியும்,
கொடுமைப்படுத்தியும் தில்லுமல்லுகள் செய்தும் தேர்தலில்
பெரும்பான்மை பெற்று, ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டு,
மக்களின் உரிமைக் குரல்வளைகளை நெறிக்கும் வகையில், அவர்
களைக் கொடுங்கோல் முறைகளில் அடக்கி யாண்டு வருகிறது,
நடுவண் அரசு எனப்படும் இந்திராப் பேராய ஆட்சி!

இந்தியா விடுதலைபெற்று முப்பத்தெட்டு ஆண்டுகளாகியும்,
இங்குள்ள பெரும்பான்மை மக்களைப் பட்டினி போட்டும்,
வாழ்வதற்குரிய வழிவகைகளை அமைத்துக் கொடுக்காமலும்,
நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக, இந் நாட்டு
முதலாளிகளுக்கே ஆக்கமான பல சட்டதிட்டங்களை அமைத்துக்
கொடுத்து, அவர்களின் நிழலிலேயே தன் வல்லதிகாரங்களை
வளர்த்துக் கொண்டு வருகிறது, இந்திராப் பேராயம்.

வெள்ளையராட்சியைக் கொள்ளையராட்சி என்று குறை
கூறினர் இந் நாட்டின் புரட்டல் தேசிய அரசியல்காரர்கள்.
ஆனால், அவர்கள் என்றுமே ஏழைகளைக் கொள்ளையடித்ததில்லை.
கொடுங்கோலர்கள் என்று வண்ணித்தார்கள்; ஆனால் அவர்கள்
என்றுமே பாட்டாளிகளுக்கும், உழவர்களுக்கும் எதிராகப் போர்
தொடுத்ததில்லை. வெறும் வெற்றுத் தேசிய உணர்ச்சிகொண்ட
போராட்டக்காரர்களையே வேளை வந்தபொழுது அடக்கி
ஒடுக்கினார்கள். அதே வேளை முகிழ்த்தபொழுது, இந்த நாட்டின்
ஆளுமை உரிமையை இவர்களிடம் தூக்கிக் கொடுத்துவிட்டு,
இந்நாட்டை விட்டே நாணயமாகவும், பெருந்தன்மையாகவும்
வெளியேறினார்கள். பொதுமக்களை நோக்கி ஒருபோதும் அவர்கள்
தம் வல்லதிகாரப் போக்குகளைக் கையாண்டதில்லை. இதை
வரலாறு பேசும்; வாழ்வியல்கள் உறுதிப்படுத்தும். அவர்களு
டைய ஆட்சி எச்சங்கள்தாம் இன்று நம் நாட்டில் கல்விக் கூடங்க
ளாகவும், கலைக் கழகங்களாகவும், அறமன்றங்களாகவும்,
பாராளுமன்றங்களாகவும், கோட்டைகளாகவும் கொத்தளங்க
ளாகவும், ஏன்-அரசியல் சட்டங்களாகவும், அறமன்றங்களாகவும்
கூட ஒளி வீசி, அவர்களின் ஆட்சியின் மாட்சியை உலகுக்கே
உணர்த்திக் கொண்டிருக்கின்றன. அவர்கள் இந்தியாவைக்
கைப்பற்றினார்கள்; ஆனால் என்றென்றும் ஆட்சி செலுத்த விரும்
பியதில்லை! மக்களை ஆளவிரும்பினார்கள்; ஆனால், அடிமைப்படுத்த
விரும்பவில்லை. மக்களுக்குக் கல்வி கற்பித்தார்கள்; அறியாமை
யைப் போக்கினார்கள்; ஆளுமையைச் சொல்லிக் கொடுத்தார்கள்;
அறநெறியை நிலைநாட்டினார்கள்! அவர்களுக்கு முன் இங்கே
நால்வருணக் கோட்பாடும், மனுஅதர்ம ஆட்சியும், முப்புரி
நூலுந்தானே மக்களை ஆண்டு கொண்டிருந்தன! வெள்ளையர்க

Scanned with CamScanner

ளன்றோ மக்களுக்கு வாழ்வியலைக் கற்றுத்தந்த வள்ளல்கள்! அறிவியலை ஆற்றுப்படுத்திய அறிஞர்கள்! அறவியலை நிலைநாட்டிய அறவோர்கள்! நாகரிகத்தை நல்கிய நயன்மையாளர்கள்! பொதுமையை வித்திட்ட புதுமையாளர்கள்! அவர்களுக்கு முன்னர் இங்கு சாதிகள்தாமே ஒழுக்கம்! சமயங்கள்தாமே ஆட்சி நெறி! பண்டாரங்கள்தாமே பள்ளியாசிரியர்கள்! கோயில்கள் தாமே கண்காட்சிகள்! திருவிழாக்கள்தாமே குமுகாய நெறிக் கருத்தரங்குகள்.

ஆனால், இன்று, இங்கு, நிலைமைகள் மீண்டும் தலைகீழாக வன்றோ மாறிவருகின்றன. மதப்பித்தர்கள் ஆட்சிக் கட்டில் ஏறுகிறார்கள்; பணமூட்டைகள் பதவிகளில் அமர்கின்றன; கொடுமையாளர்கள் அதிகாரங்களைக் கைப்பற்றுகின்றனர்; பழமைக்கு மீண்டும் ஆலவட்டம் வீசப்படுகிறது! புதுமைக்கு மீண்டும் கதவடைப்பு செய்யப்படுகிறது! அறியாமை, அறிவியலுடன் கைகோத்துக் கொண்டு உலா வருகிறது! முதலாளியக் கோமான்கள் நாட்டையே விலைபேசிக் கொண்டிருக்கிறார்கள்! மதங்கள் மெருகூட்டப் பெறுகின்றன! சாதிகள் சதிராட்டம் போடுகின்றன! கொள்ளையர்கள் திட்டங்கள் தீட்டுகின்றனர்! கொடுமையாளர்கள் சட்டங்களை உருவாக்குகின்றனர்! இங்கே, இப்பொழுது அறமெங்கே? ஆட்சியெங்கே? ஆள்பவர்கள்தாம் எங்கே? துமுக்கியும், குண்டுகளும், நச்சுப்புகைகளும், தகரிகளும் அன்றோ ஆட்சி செய்கின்றன! படைத்துறைகளும் காவல் துறைகளுமன்றோ அதிகாரங்களைக் கைகளில் எடுத்துக் கொண்டன! நாள்தோறும் எத்தனைத் துமுக்கிச் சூடுகள்! எத்தனைக் கொடுமைச் சாவுகள்! எத்தனையெத்தனை உறுப்புச்சிதைவுகள்! எத்தனை யெத்தனைக் கற்பழிப்புகள்! இராசீவ் காந்தியின் மனைவியும் நடுத்தெருவில் காவலின்றிப் போக முடியாதே! — இது முடியாட்சியை வீழ்த்திய குடியாட்சி நாடு! இங்கு வாழ்க அன்னை (வந்தே மாதரம்) பாட்டு இசைகள்! தூ! இஃதொரு நாடா? இதற்கோர் அரசா? வெட்கம்! வெட்கம்!!

இந்தக் கேடுகெட்ட நாட்டில்தான், வறுமையைப் போக்கச் சட்டங்கள் இல்லை; வலிந்துகேட்பவர் (வன்முறையாளர்) களுக்குச் சாவுத் தண்டனையாம்! மக்கள் குடியிருப்புக்கு வக்கில்லை; கோரிக்கையாளர்களுக்கு வாணாள் சிறையாம்! படித்த இளைஞர்களுக்கு வேலையில்லை; பதவி வெறியர்களுக்குப் பல்வேறு அதிகாரங்களாம்! காந்தி பிறந்த நாடாம் இது! விளம்பரப்படுத்துகிறார்கள்! ஆனால் கயமைக்கும் களியாட்டத்துக்குமே இங்கு வாழ்க்கை! ஆனால், இவர்கள் சுட்டியுரைக்கும் வன்முறையாளர்களும், கொடுமையாளர்களும் யார்? அவர்கள் எங்கே தோன்றினர்? ஏன், அவர்கள் கருவிகளைக் கையிலெடுத்தார்கள்? அவர்களின் கோரிக்கைகள் என்ன? போராட்டங்களை ஏன் செய்கிறார்கள்? மீண்டும் இந்தப் புனித (!) நாட்டை வெள்ளைக் காரனிடம் ஒப்படைக்கக் கேட்டார்களா? ஆளுநரும் (கவர்னரும்) அரசப் பகராளரும் (வைசிராயும்) மீண்டும் இந்நாட்டை ஆளுமை

செய்ய வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனரா? இல்லை, நாணயம் அடிக்கத்தான் தங்களுக்கு உரிமை வழங்க வேண்டும் என்று வழக்காடினார்களா? இல்லை, இல்லை! அவர்கள் கேட்பது மொழிஉரிமை! இனநல உரிமை! வாழ்வியல் உரிமை! தன்னாட்சி உரிமை! வறுமைக்கு மருந்து! உரிமைக்கு விடுதலை! அவர்கள் ஏன் அவற்றை வேண்டினர்?

அனைத்து இனங்களுக்கும், அனைத்து நாகரிகங்களுக்கும், பண்பாடுகளுக்கும், அனைத்து மொழிகளுக்கும் பொதுவான இந் நாட்டை, ஓரினமே, ஒரு நாகரிகமே ஒரு பண்பாடே, ஒரு மொழியே ஆள்வதற்கு முற்றாட்சி உரிமை கேட்கிறது. அதனால் பிற இனங்களை, பிற இன தேசிய நாகரிகப் பண்பாடுகளை அழிக்கிறது; பிற தேசிய இன மொழிகளைச் சிதைக்கிறது! இவையனைத்தும் மதத்தின் பெயரால், ஒருமைப்பாட்டின் பெயரால், ஒற்றுமையின் பெயரால் துமுக்கிகளின் துணையைக்கொண்டு குண்டுகளின் வலிமைகளைக் கொண்டு படையாளிகளையும் காவலாளிகளையும் சார்பாக வைத்துக்கொண்டும் செய்யப்படுகின்றன! சீரழிக்கப் படுகின்றன!

பேசிப் பார்த்தார்கள் மக்கள்! கோரிக்கை விடுத்துப்பார்த்தார்கள், தங்கள் வாழ்வைப் பறிகொடுத்தவர்கள்! எழுதிப் பார்த்தார்கள், அறிஞர்கள்! ஏனென்று கேட்கவில்லை அரசு! அணியணியாகத் திரண்டு, மாநாடுகள் கூட்டி, அமைதியான, மென்மையான, வேண்டுகோள்கள், தீர்மானங்கள், முழக்கங்கள்-முதலிய அனைத்தும் இந்நாட்டு ஆட்சியாளர்களை மேலும் மேலும் வலிந்த ஊமையர்களாக்கின; செவிடர்களாக்கின; செருக்குடையவர்களாக மாற்றின, இறுதியில் இறுமாப்புடையவர்களாக மாறினர் அரசினர்! நெருக்கடி நிலைகள் வந்தன! கருப்புச் சட்டங்கள் உருவாக்கப்பட்டன! மிசாக்கள் தோன்றின! சிறைச்சாலைகள் நிரப்பப்பட்டன! தலைவர்கள் சிறைக்குள்ளே வைக்கப்பட்டார்கள்; வெளியே அடிதடிகள்; கண்ணீர்ப் புகைகள்; குண்டு வெடிப்புகள்; அடாவடித்தன அடக்குமுறைகள்; கொடுமைக் கொலைகள்; தீ வைப்புகள்;—இவற்றை ஆட்சியாளரின் கைக்கூலிகள் செய்தனர்; அரம்பர்கள் (ரௌடிகள்) செய்தனர்; அவர்களால் ஏழைகளின் இருப்பிடங்கள் தகர்க்கப்பட்டன! அவர்களின் குடியிருப்புகள் பற்றியெரிந்தன! அவர்களின் விளைநிலங்கள் பறிக்கப்பட்டன! ஊர்விட்டு ஊர், மாநிலம் விட்டு மாநிலம் என்று அந்த ஏழைக் குடிமக்கள், வாயில்லாப் பூச்சிகள், புன்மைத் தேரைகள், —ஓடியும் ஒளிந்தும் உயிர்களைக் காத்துக்கொள்ள முயற்சி செய்தன! ஆனால், பல இடங்களில் பல நேரங்களில், பல காலங்களில் அவ்வேழை உயிர்கள் அவ் வெலும்புக்கூடுகள், இந்நாட்டு மண்ணில் கிளர்ந்த பண் புழுக்கள் — ஒட்டு மொத்தமாகப் பிடிக்கப்பட்டன; உயிரோடு புதைக்கப்பட்டன; உயிர்த்துடிப் புள்ளவை சாகடிக்கப்பட்டன; உடலோடும் உணர்வோடும் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன!

இவற்றுக்கெல்லாம் அரசு என்ன காரணம் சொன்னது? அவர்கள் தீவினையாளர்கள்; வன்முறையாளர்கள்; கொடுமை,

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

யாளர்கள் ; குமுகாயப் பகைவர்கள் ; அரசுக்கு எதிரானவர்கள் ; ஆட்சியைக் கைப்பற்ற விரும்பும் நாட்டு இரண்டகர்கள் ; அயல் நாட்டுக் கையாள்கள்; ஒற்றுமைக் கேடர்கள் ; ஒருமைப் பாட்டின் எதிரிகள்; இந்தியத் தேசியத்திற்கு மாறானவர்கள்; இவ்வாறெல்லாம் அவர்களின்மேல் குற்றச் சாட்டுகளைப் பொழிந்து தள்ளியது, பார்ப்பனிய முதலாளிய வல்லதிகார மதக்கேடர்களின் கைகளில் உள்ள தில்லியரசு !

எனவே, பல்வேறு காரணங்களுக்காக, இந்தியாவில், தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக, ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாக மலைவாழ் மக்களின் சார்பாக, தேசிய இன எழுச்சியாளர்களின் சார்பாக, மொழியுரிமைப் போராட்டக்காரர்களின் சார்பாக, கொடுமையான கருப்புச் சட்டங்களின் எதிர்ப்பாளர்களின் சார்பாக, மத வல்லாண்மைக் கொடுமையாளர்களின் எதிர்ப்பணிகளின் சார்பாக, பார்ப்பனியத்தின் எதிராளிகள் சார்பாக, முதலாளியப் பகைவர்களின சார்பாக, அயல்நாட்டு மூல முதலீட்டாளர்களின் எதிர்ப்பணியாளர்களின் சார்பாக, உள்நாட்டுத் தரகு முதலாளிகளின் எதிர்ப்பாளர்களின் சார்பாக, தொழிலாளர்களின் அடக்குமுறைக்கு எதிராக, உழவர்களின் உரிமைப் போராட்டக்காரர்களின் சார்பாக, இலங்கையில் அழிக்கப்படும் தமிழீழத் தமிழர்களின் சார்பாக, ஆங்காங்கு, இந்திய நாடு முழுவதும் - உத்திரப் பிரதேசம், பஞ்சாப், அசாம், மிசோரம், ஒரிசா, காசுமீர், குசராத், மகாராட்டிரம், கேரளா, ஆந்திரம், கருநாடகம், தமிழ்நாடு, பீகார், நாகலாந்து முதலிய மாநிலங்களில், ஏதோ ஒருவகையில் மக்கள் போராட்டமாக, எழுச்சிகளும், கிளர்ச்சிகளும், போராட்டங்களும், வன்முறைகளும், சிறை நிரப்பும் போராட்டங்களுமாக வெடித்துக் கிளம்பிக்கொண்டிருக்கின்றன.

தில்லியரசும், மாநில அரசுகளும் இவ்வெதிர்ப்புகளைப் பல்வேறு வகைகளில் அடக்கியும்-ஒடுக்கியும் வருகின்றன. ஒவ்வோரிடத்திலும் வெவ்வேறு வகையான உத்திகளும், பாணிகளும் கையாளப்படுகின்றன. போராட்டங்கள் தொடர்ந்து நடப்பதால், அடக்குமுறைகளும் தொடர்கின்றன. சில விடங்களில் மாநிலக் காவல் துறையினரைக் கொண்டே எழுச்சிகள் அடக்கியொடுக்கப்படுகின்றன. சிலவிடங்களில் படைத்துறைகள் அழைக்கப்படுகின்றன. சிற்சில விடங்களில் ஆளுங் கட்சிகளில் உள்ள குண்டர்களைக் கொண்டும், குமுகாயக் கொடியவர்களைக் கொண்டும் அரசுகளே எதிர்ப் போராட்டங்களை நடத்தி, நேர்மையான உரிமைப் போராட்டக் காரர்களை முறியடிக்கின்றன. இவ்வாறாகக் கடந்த முப்பது ஆண்டுகளாக இக் கிளர்ச்சிகளும், போராட்டங்களும் நாளுக்கு நாள் உள்நாட்டுப் போர்களாகவே நடந்து வருகின்றன.

நடுவணரசும் இவற்றை ஒடுக்கவும், அடக்கவும் நடைமுறையில் உள்ள சட்டங்கள் போதாவென்று, புதுப் புதுக் கடுமையான

Scanned with CamScanner

-கொடுமையான கருப்புச் சட்டங்களை, வெள்ளைக்காரர்கள் மக்களின் உரிமைக் கிளர்ச்சிகளை ஒடுக்க எவ்வளவு கொடுமையான சட்ட நடைமுறைகளைக் கையாண்டார்களோ, அவற்றைவிட மிக மிகக் கொடுமை வாய்ந்த சட்டங்களை, அயலவரின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுக் குடியரசமைப்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் வாழ்வியல் உரிமைக் கிளர்ச்சிகளுக் கெதிராக, இந் நாட்டை ஆண்டு கொண்டிருக்கும் வல்லாளுமைக்காரர்கள், போட்டுப் பலவகையானும் மக்களுக்கெதிரான உள்நாட்டுப் போரைத் தொடங்கி நடத்தி வருகிறார்கள்.

இதுவன்றி, மக்கள் தங்கள் உரிமை உணர்வுகளில் மனம் செலுத்தாத வண்ணம், இதுநாள் வரையில் இல்லாத மத விழா நாள்களை நடைமுறைப் படுத்தியும், கலை, பண்பாட்டியல் என்னும் பெயர்களில், ஆரவார அருவருப்புத் தனங்களைப் புகுத்தியும், பற் பல தேசிய விளையாட்டுகளைப் புதுக்கியும், அனைத்துலக அரசியல், கலை, பண்பாட்டியல், பொருளியல் மாநாடுகளை நடத்தியும், அவற்றின் செயல்பாடுகளை யெல்லாம் இந்தியாவிலுள்ள அனைத்து வானொலி நிலையங்களின் வழியாகவும், தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்களின் வழியாகவும், ஒலி-ஒளி பரப்புதல்களைச் செய்தும், இங்குள்ள வல்லதிகாரக் கொடுமை அரசு, மக்களை மூளைச் சலவைச் செய்தும், திசைதிருப்பியும் வருகிறது. இவ்வகையில், நாட்டின் மிகு பொருளியலைச் சீரழித்தும் சிதைத்தும் வீணாக்கியும் வருகிறது. இன்னும், (1962-இல் சீனத் தக்குதலும், 1965-இல் பாக்கித்தான் வன்கவர்பும் (ஆக்கிரமிப்பும்), 1971-இல் வங்காளப்போரும் தவிர,) இன்று, எந்தவகையான வெளிநாட்டுப் போரும் நடைபெறாத நிலையில், அயல்நாடுகளான பாக்கித்தான், சீனா முதலிய நாடுகள் போர் மூட்டங்கள் இட்டிருப்பதாக மக்களிடத்தில் ஓர் அச்சத்தையும் செயற்கையாகப் பரப்பி வருகிறது. இந்த நிலையில், கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னிருந்த தன் பாதுகாப்புச் செலவை நான்கு மடங்கு பெருக்கிப் படைத்துறைகளை மக்களுக்கெதிரான போராட்டங்களில் ஈடுபடுத்துவதற்காகக் கருவிகளாலும் ஆட்களின் எண்ணிக்கையாலும் வலுப்படுத்தி வருகின்றது, (1975-76 ஆம் ஆண்டில் இந்தியாவின் பாதுகாப்புச் செலவு 2,000 கோடி. 1985-86 ஆம் ஆண்டுக்கான, அண்மையில் வகுத்த வரவு-செலவுத் திட்டப்படி இச் செலவு 8,000 கோடியாக உயர்ந்திருக்கிறது.) இவ்வகையில் இந் நாட்டின் மொத்த வருமானத்தில் ஏறத்தாழ ஏழில் ஒரு பங்கை, அஃதாவது 15 விழுக்காட்டைச் செலவு செய்து கொண்டிருக்கிறது.

ஆனால், இத்தனை முன்னெச்சரிக்கைகளும், அண்மையில் அது கொண்டுவந்த, வன்முறை யொடுக்கத் தனிச்சட்டம், நாட்டின் பாதுகாப்பிற் கெதிராகக் கருவிகளை உருவாக்குவதும் கொள்முதல் செய்வதும் ஆகியவற்றுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கும் சட்டம் போடுவதும், கொடிய வன்முறையாளர்களுக்குச் சாவுத்

செய்திகள்

(1) செல்வமணி-குணசுந்தரி வாழ்க!

கடந்த மேழம் (சித்திரைத் திங்கள்) 2-ஆம் பக்கல் (14-4-85) ஞாயிறு காலை 9 மணியளவில், சென்னை, மா. கணேசன்-கத்தூரி இணையரின் தலைமகன் செல்வன் மா. க. செல்வமணிக்கும், போரூர், மா. வடிவேல்-உரோசா அம்மாள் இணையரின் மகள் செல்வி. மா. வ. குணசுந்தரிக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் தலைமையில், திருவொற்றியூர் கௌரி ஆசிரமத்தில், தமிழ்த் திருமணம் சிறப்புற நடைபெற்றது. மணமகன் தந்தை, திரு. கணேசன் அவர்கள், தலைவர் அமர்த்தம் கூறியபின், தலைவர் தம் முன்னுரையில், தமிழர் வரலாற்றையும் பண்பாட்டையும் சுருக்கமாக விளக்கி, தமிழர் திருமண நிகழ்வை நடத்தி வைத்தார். அவரைத் தொடர்ந்து, திருவாளர்கள்: மலேசியா சக்திமோகன், சொல்லாய்வறிஞர், ப. அருளி, சூரியதீபன், ஆகியோர்கள், மணமக்களை வாழ்த்தி, நல்லுரை வழங்கினர்கள். பின்னர்; தலைவர் முடிவுரையாக, இல்லறவியல், வாழ்வியல் முறைகளை நன்கு விளக்கி நிகழ்ச்சியை இனிதே நிறைவுற முடித்து வைத்தார். தொடக்கத்தில், திரு. கே. வீராச்சாமி (அசோக் லேலண்டு) அவர்கள் வரவேற்புரையும், இறுதியில் திரு. செல்வம் அவர்கள் நன்றியுரையும் ஆற்றினர்கள். வந்திருந்தவர்களுக்கு இனிய பகல் விருந்து அளிக்கப்பெற்றது.

(2) பைந்தமிழ்ப் பாசறை தொடக்க விழா:
பாவேந்தர் 95 ஆம் பிறந்தநாள் விழா, எண்ணூர்.

சென்ற 30—4—85 செவ்வாய் மாலை, 3-30 மணியளவில்,

(முன் பக்கத் தொடர்ச்சி)

தண்டனை, வாணாள் சிறைத் தண்டனை வழங்கும் சட்டம் ஆகிய கொடிய சட்டங்களை நடைமுறைப்படுத்த விழைவதும், தன் நாட்டு மக்கள் மீதே அது போர் தொடுக்கத் தொடங்கிவிட்டது என்பதை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் ஆகும்.

ஒரு நாடு, தன் சொந்த நாட்டு மக்களின் உரிமைப் போராட்டங்களை உள்நாட்டுப் போராகக் கண்டு அஞ்சுவதும் அவற்றுக்கெதிராகத் தானே அம் மக்கள் மேல் போர் தொடுக்க முற்படுவதும் நல்ல எதிர்காலத்திற்கான அறிகுறிகள் அல்ல. அது நாடு, உள் உடைவுகளை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதற்கான அறிகுறியே ஆகும். உள்நாட்டுச் சிக்கல்கள் எத்தகையன வானாலும், அவற்றைப் போர் முனைப்புகளாக ஒரு நாடு அல்லது ஓர் அரசு கருதி அவற்றை அடக்குகின்ற முனைப்புகளில் போர் வேகம் காட்டுவது, எந்த நாட்டு அரசுக்கும் அழிவையே தேடிக்கொடுப்பதாகும் என்ற மட்டில் இப்பொழுது எச்சரிக்கை விடுக்கிறோம். இனி, போகப் போகப் பார்ப்போம்.

— பெருஞ்சித்திரனார்

சென்னை எண்ணூர், அசோக் இலேலண்டு தொழிலக நுழைவு வாயில் முன்னர், தொழிலாளர்களின் நலம் நோக்கிப் புதிதாக அமைக்கப்பெற்ற பைந்தமிழ்ப் பாசறை என்னும் அமைப்பின் தொடக்க விழாவும், அது முதன்முதல் கொண்டாடிய பாவேந்தரின் 95 ஆம் பிறந்தநாள் விழாவும் ஒருங்கு சேர்ந்து கொண்டாடப்பெற்றன. நிகழ்ச்சிக்கு திரு. ம. தென்முகநம்பி தலைமை தாங்கினார். வரவேற்புரை நிகழ்த்திய செயல் மறவரும், பாசறையின் அமைப்பாளரும் ஆகிய திரு. துரை. தென்னவன் அவர்கள், "அசோக் இலேலண்டு தொழிலாளர் நலம் கருதித் தனித்தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடவும், தமிழின முன்னேற்றத்திற்கு உழைக்கவும், தமிழக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கவும் ஆன மூன்று முகாமைக் கொள்கைக்கெனப் 'பைந்தமிழ்ப் பாசறை" தொடங்கப் பெற்றிருப்பதாகவும் கூறினார். அதன் பின்னர், தலைவர் அவர்களும், அதனையடுத்து, திருவாளர்கள் சோ. இராசேந்திரன். சித்தார்த்தன் ஆகியோரும் பாசறையின் கொள்கையினை விளக்கி உரை செய்தனர். இறுதியாகப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் பாசறையைத்தொடக்கி வைத்து, அரியதோர் உணர்வுரை யாற்றினார். அவர்கள் தம் உரைத் தொடக்கத்தில், 'செந்தமிழை, செந்தமிழ் நாட்டைச் சிறை மீட்க' என்னும் பாவேந்தர் பாடலை எடுத்துக்கூறி, செந்தமிழும், செந்தமிழ் இனமும், நாடும் எப்படிச் சிறைப்பட்டிருக்கின்றன என்பதைப் பல எடுத்துக் காட்டுகளுடன் விளக்கி, அவற்றை மீட்கத் தொழிலாளர்கள் எவ்வெவ் வகையில் துணையாக நிற்கவேண்டும் என்பதை ஒன்றே கால் மணி நேரம் சிறப்புற எடுத்துரைத்தார். அசோக் இலேலண்டு வரலாற்றிலேயே இத்தகைய சிறப்பான உரை நிகழ்ந்ததில்லையென்றும், தொழிலாளர்கள் இவ்வளவு நீண்ட நேரம் அமைதியுடன் இருந்து கேட்டதில்லையென்றும், அனைவரும் கூறிச்சென்றது குறிப்பிடத்தக்கது. இறுதியில், திரு. ப. சண்முகசுந்தரம் நன்றிகூற நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது.

(3) கல்பாக்கம் கலை, அறிவியல் மன்றம் — வேனில் விழா :

ஆண்டுதோறும், கல்பாக்கம் அணுவாற்றல் நகரியத்தில் நடைபெறும் வேனில் விழா, இவ்வாண்டும் சிறப்புற நடைபெற்றது. விழா நடைபெற்ற 6. 7, 8—5—85 ஆம் பக்கல்களில் பாட்டரங்கமும், இலக்கியச் சிறப்புரையும், தெருக்கூத்தும், ஒவ்வொருநாள் மாலையிலும் நிகழ்த்தப்பெற்றன. இரண்டாம் நாள் இலக்கியச் சிறப்புரையைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார், 'மாந்தனும் மொழியும்' என்னும் தலைப்பில் ஏறத்தாழ 2-30 மணி நேரம் நிகழ்த்தினார். மொழி எவ்வாறு மாந்தனின் சிறந்த பண்பாட்டியல் கூறாகவும், அறிவு வளர்ச்சிக்குரிய ஆக்கக் கருவியாகவும் உள்ளதென்றும், அதனை எவ்வாறு பிழையில்லாமலும், கீழ்மைப்படுத்தாமலும் கலப்புச்செய்து சிதைக்காமலும், வளர்ச்சியுறச் செய்ய வேண்டுமென்றும், விரிவாகவும்-விளக்கமாகவும் எடுத்துக்கூறினார். தொடக்கத்தில் கலை இலக்கிய மன்றச் செயலர். திரு. சீ. இராசேந்திரன் அவர்கள் வரவேற்புரையும். நன்றியுரையும் நிகழ்த்தினார். இரவு 11 மணியளவில் நிகழ்ச்சி நிறைவுற்றது. 0



நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

பாட்டு : ௯௦

புனையினும் பூட்டு கழலறப் போகும்
மிசையினும் மேனி திரங்கலும் ஆகும்
ஓம்பினும் வன்மை காலத்து ஒழியும்
சாம்பினும் அழலுணச் சாம்பர் கழியும்
ஒக்கல் புறத்தழ விக்கல் மேலுற்று
முக்கலும் முனகலும் அடர்ந்துநா புலர்ந்து
திக்கலும் திணறலும் ஆகி உரைதப்பிக்
கக்கலும் கழிச்சலும் ஆலக் கண்ணவிந்து
நன்னடை நெற்றி நகர்ந்தும் கிடந்தும்
திண்மமும் மாறி நீர்மமும் கொள்ளாப்
புறங்கடை வாயிற் புகட்டிய தொழுக
வெள்விழி யேறி அறிவு வெளிறி
மெலமெல ஆவி கழிவுறு மேனாள்
இருந்து போகிய இடம்பார்த் தழூஉம்
பெருந்திரள் மாக்கள் பெறுவது மிலையெனும்
இழிதகைக் கஞ்சியோ மகனே
தழல்குளித் திருந்தனை தமிழொடு சிறந்தே!

பொழிப்புரை : பலவாறு (பூட்டியும் அணிந்தும் உடுத்தும் பூசியும்) புனைவு (அழகு) செய்து வந்தாலும், எலும்புகளால் பூட்டப் பெற்றுத் தசைகளால் பொதியப்பெற்றுத் தோலால் வேயப்பெற்ற இவ்வுடலானது, தன் கட்டமைப்புக் கழன்று இறுதியில் ஒன்றுமில்லாமற் போகும்; (பலவாறு, பலவகையான பண்டங்களை) உண்டு காத்து வந்தாலும், இம் மேனியானது, காய்ந்து சுருங்கிப் போகும்; இதன் நலன்களைப் பலவாறு பேணிப் புரந்து நின்றாலும், இவ்வுடல் வலிமையானது, குறித்த காலத்தில் இல்லாது போய்விடும்; அவ்வாறு வலிமை ஒழிந்து, ஒடுங்கிப் போன உடலை எரி உண்டு தீர்த்துச் சாம்பலாகச் செய்யினும், அதுவும் ஒன்றுமில்லாமல் மண்ணில் கழிந்துபோகும்; உறவினர்கள் புறமாக இருந்து அழவும், இறுதி விக்கலானது மேலேறி நின்று, மூச்சு முட்டவும், ஒலி முனகலும் மிகுந்து, நாவானது உலர்ந்து போய், உரை திக்கலும் திணறுவதும் ஆகி, பேச இயலாமல் உரை தப்பிப்போய், உண்டது வாய் வழியாகவும், செரித்தது கருவாய் வழியாகவும் ஒலியுடன் வெளியேவர, கண்கள் ஒளி அவிந்துபோக,

Scanned with CamScanner

முன்னர் இருந்த நல்ல நடையானது தடுமாறி, நகர்ந்தும், படுகிடையாய்க் கிடந்தும், பருவுணவு உண்ட நிலை மாறி, நீர்ம உணவும் கொள்ள வியலாமல், இன்னொருவர் புகட்டிய நீர்ம உணவும் புறக்கடைவழியாக ஒழுக, வெள்ளை விழி மேலே ஏறவும், அறிவானது மங்கிப்போகவும், மெல்ல மெல்ல ஆவியானது கழிகின்ற மேலே வரும் நாளில், தாம் இறுதியாகப் படுத்திருந்து உயிர் போகிய இடத்தைப் பார்த்து அழுகின்ற, பெருந்திரளான மக்கள் தம் வாழ்நாளிலும் தாம் பெறப்போகின்றது இந் நிகழ்ச்சி தவிர வேறொன்றுமில்லை எனும், இழிவு மிகுந்த இவ் வாழ்வின் முடிவுக்கு அஞ்சியோ, மகனே, தீயில் குளித்து தமிழ்மொழியுடன் என்றும் சிறப்புற சாகா நிலையில் இருக்கின்றாய், நீயே!

விரிப்பு : இப் பாடல் புறத்துறையைச் சார்ந்தது.

இதுவும், முந்தைய பாடல் காலத்து நடந்த வியப்புக்குரிய ஒரு செயலைப் பாராட்டியதாகும்.

தீக்குளியல் செய்த தேவனூர்ச் செம்மல் சிவலிங்கத்தை உடல் நிலையாமை முன்னிருத்திப் பாடியது.

புனையினும் : அணிகளைப் பொருந்தப் பூட்டியும், மேலுற அணிந்தும், உடுக்கை உடுத்தும், மண நெய்யுந் தூளும் பல பூசியும் உடலைப் புனைவு (அழகு) செய்யினும்.

பூட்டு : எலும்புகளாலும், தசைகளாலும், நார் நரம்புகளாலும் தோலாலும் பூட்டப்பெற்ற இவ் வுடல் சேர்க்கையானது.

கழலற — அறக் கழன்று—கட்டமைப்புக் கழன்று.

மிசையினும் — பலவகையான பண்டங்களை உண்ணினும்.

மேனிதிரங்கல் — உடலானது காலத்தால் சாய்ந்து சுருங்குதல்.

ஓம்பினும் — (இதன் நலன்களைப் பலவாறு) பேணிப் புரந்தாலும்

வன்மை — வலிமை;

காலத்து ஒழியும்—காலத்தால் இல்லாமற்போகும்.

சாம்பினும் — ஒடுங்கிப்போயினும்.

அழலுண — அழல் உண்ண; சாம்பர்—சாம்பல்.

ஒக்கல் — உறவினர். பொருந்தியிருப்பவர்.

முக்கல் — காற்று வெளியேற வலிந்து முயலுதல்.

முனகல் — சிறிது சிறிதாகக் காற்று வெளியேறும் ஒலி.

அடர்ந்து நா புலர்ந்து — நா வறண்டு உலர்ந்துபோய்.

உரை தப்பி — உரை மாறுதல்—தவறுதல்.

கக்கலும் கழிசலும் ஆல : உண்டது மேல் வாய் வழியாகவும் செரித்தது கீழ்வாய் வழியாகவும் ஒலியெழுப்பி வெளியே வர.

கண்ணவிந்து : கண் ஒளி இழந்து.

நெற்றி : தடுமாறி.

நகர்ந்தும் கிடந்தும் : இயன்றவழி நகர்ந்தும், இயலாவழிக் கிடந்தும்.

திண்மமும் மாறி நீர்மமும் கொள்ளா : பருப்பொருள் உணவும் தவிர்ந்து, நீர்ம உணவும் கொள்ள முடியாமல்.

புறங்கடை வாயில் : வாயின் புறத்துள்ள கடைவாயில்.

புகட்டியது ஒழுக : பிறரால் நீர்ம உணவாகப் புகட்டப் பெற்றது, உள்ளே போக இயலாமல் ஒழுகும் படி.

வெள்விழியேறி : கண்களின் வெள்ளை விழி மேலேறி நிற்க.

அறிவு வெளிறி : அறிவுணர்வானது அறவே இல்லை என்று ஆகும்படி இல்லாமற் போக.

வெள்ளை விழி மேலேறிக் குத்திட்டு நிற்பதும், அறிவு அறவே இல்லாமற் போவதும், இறப்பின் இறுதி நிகழ்ச்சிகள்.

மெலமெல ஆவி கழிவுறு மேனாள் : மெல்ல மெல்ல ஆவி கழிந்து போகின்ற அடுத்து வரும் இறுதி நாள்.

இருந்து போகிய இடம் : இறுதியாகச் சாப்படுக்கையில் படுத்திருந்து உயிர்விடும் இடம்.

பார்த்து அழும் : இந்த இடத்தில்தானே அவர் படுத்திருந்து உயிர் விட்டார் என்று உறவினர் பார்த்து அழுகின்ற இடம்.

பெருந்திரள் மாக்கள் பெறுவதும் இலையெனும் : மிக்க அளவில் திரண்ட மக்கள், தாங்கள் தங்கள் வாழ்வில் இறுதியாகப் பெறப்போவதும் இம் முடிவை விட்டு வேறொன்று இல்லை என்னும்.

இழிதகைக்கு : இழிவான தன்மைக்கு.

அஞ்சியோ : இதுபோலும் இழிவான வாழ்க்கைக்கு யானும் ஒருப்படுவதோ என்று அஞ்சியோ.

தழல் குளித்து : நெருப்பில் குளிப்பதுபோல் மூழ்கி.

தமிழொடு சிறந்து இருந்தனை : என்றும் உள்ள தமிழ் மொழியுடன் பிறர்போல் அழிவுறாது சிறப்புற என்றும் நீ இருந்தாய் கொல்.

கடந்த 1965-ஆம் ஆண்டு நடந்த இந்தியெதிர்ப்புப் போராட்டத்தைப் பற்றியெழுந்த பாடல் இது.

முந்தைய பாடல்களில் முழுவரலாற்றையும் கண்டு கொள்க.

'எல்லாரும் வழக்கமாக வாழ்ந்து, ஒரு சிறப்பும் பெறாமல் இயல்பாக மறைந்தொழியும் வாழ்க்கை போல் நாமும் வாழ்ந்து மடிய வேண்டுமோ?' என்று ஏற்படும் இழிவுக்கு அஞ்சியவனாகத் தமிழ்மொழிக்கெனப் போராடித் தீக்குளித்து மாய்ந்தனன் கொல்லோ, தேவனூர்ச் செம்மல் சிவலிங்கம்? 'அவன் புகழ் தமிழ் உள்ளளவும் சிறந்து நிற்கும்' என்பதாகும் இப் பாடல்.

இதில், ஒரு மாந்தன் பலவாறான சிறப்புகளோடு வாழ்ந்தாலும், பலவகையினும் துய்ப்புச் செய்து இன்பம் பெற்றாலும், இறுதியில் அவன் வாழ்க்கை, எவ்வகைச் சிறப்பும் இன்றி, எல்லாருக்கும் ஏற்ற இயல்பான முடிவே பெறுகிறது. எனவே, இயல்பாக மாய்ந்தொழியும் வாழ்க்கைக்கு ஒரு சிறப்புத் தேடுவது, அதனை ஒரு கொள்கையொடு முடித்துக் கொள்வதே ஆகும் என்னும் உயர் நோக்கத்தை வலியுறுத்தி, இந்தி மொழித் திணிப்பை எதிர்த்துக் தமிழ்மொழிக்கெனத் தன் உயிரைத் தீக் குளித்து மாய்த்துக்கொண்ட சிவலிங்கத்தை முன்னிறுத்திப் பாடியது, இப் பாடல்.

உயிர் நிலையாமையும், உடல் அழிவும் நன்கு புலப்படுத்திக் கூறப்பெற்ற இப் பாடலில், இறப்புக் காலத்து நேரும் சாவுக் குறிகள் விளங்கக் காட்டப் பெறுகின்றன.

விக்கல் மேலுறுதலும், மூச்சு முட்டுதலும், நா வறண்டு போதலும், உரை திக்குவதும், பேசுதற்குத் திணறித் தொல்லைப் படுதலும், உண்டது கக்கலும், உள்ளே செரித்துப் போனது தன்னுணர்வின்றியே நீர்மலமாய்க் கழிவதும், அவற்றின் ஒலி யாரவாரமும், கண்கள் ஒளிகுன்றுவதும், தப்பித்தவறி எழுந்தால் நடை தடுமாறுவதும், எனவே நகர்வதும், இயலாவிடத்துக் கிடப்பதும், பருவுணவு கொள்ளவியலாமையும், கொண்ட நீர்ம உணவும் உள்ளே செல்லாமல் புறங்கடை வாய்வழி வெளியே ஒழுகுவதும், வெள்ளை விழி மேலேறுதலும், அறிவு மறைவதும், ஆவி மெதுமெதுவாய்க் கழிவதும் ஆகிய சாவின் படிப்படியாக நிகழும் இறுதி நிகழ்ச்சிகள் நன்கு புலப்படுத்தப் பெறுகின்றன.

இவையன்றியும், இயல்பாக, எல்லார்க்கும் வந்து நேரும் வாழ்விலும் சாவிலும் என்ன சிறப்புள்ளது? உயிரை ஒரு கொள்கைக்காக இழப்பதில்தான் சிறப்பு உள்ளது என்னும், உயர் நோக்கம் இடம் நோக்கிச் சுட்டப்பெற்றது என்க.

இப் பாடல் முன்னைது திணையும், தழற்குளியல் என் துறையும் என்க.

திணையும் துறையும் புதியன.

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் அடங்கிய, கிழமை இதழ்

1.	தனியிதழ்	விலை உரு.	0. 65
2.	ஆண்டுக் கட்டணம்	உரு.	36. 00
3.	அரையாண்டுக் கட்டணம்	உரு.	18. 00

தொடர்புக்கு: தமிழ் நிலம்—5, அருணாசலத் தெரு. சென்னை 5.

உருசியாவின் முன்னேற்ற அளவு!

மாசுகோவில் ஒரு நாள்

(பொதுவுடைமை நாடான உருசியா எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறது என்பதைப் பொதுவாக அறிந்து கொள்வது, நாம் எந்த அளவுக்குப் பின்தங்கியிருக்கிறோம் என்பதைத் தெரிந்துகொள்ள உதவும். அங்குள்ள நகரங்களில் ஒன்றாகவும், தலைநகராகவும் இருக்கின்ற மாசுகோவில் மட்டும் ஒருநாளில் என்னென்ன விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை அறிந்து கொள்ளுங்கள்.)

மாசுகோ தொழில் நிறுவனங்கள் ஒவ்வொரு நாளும் 40,000 கடிகாரங்கள், 1430 வானொலிப் பெட்டிகள், 2422 தொலைக்காட்சிப்பெட்கள், 20,29,000 சதுரமாத்திரி(மீட்டர்) துணி, 610 குளிர்பதனப் பெட்டிகள் முதலியவை உருவாக்கம் செய்கின்றன.

மாசுகோவில் உள்ள அச்சகங்கள் அன்றாடம் 5·8 கோடி நாளிதழ்ப் படிகள், 60 இலக்கத்திற்கும் அதிகமான தாளிகைகள், ஏறத்தாழ 40 இலக்கம் பொத்தகப் படிகள் முதலியவற்றை அச்சிடுகின்றன. இந்தப் புள்ளி விவரத்தினை மாசுகோ புள்ளி விளக்க நிறுவனம் அறிவித்துள்ளது.

மாசுகோ பொதுப் போக்குவரத்து வண்டிகளின் மூலம் நாளொன்றுக்கு 1·54 கோடி பேர் பயணம் செய்கின்றனர். அவர்களில் 66 இலக்கம் பேர் நிலவடித் தொடர்வண்டிகள் மூலம் செல்கின்றனர். ஒவ்வொரு நாளும் 162 குடியிருப்புகள் மக்களுக்கு ஒதுக்கித் தரப்படுகின்றன. 3,21,000 பேர் திரைப்படங்களுக்கும், 41,000 பேர் நாடக, நாட்டிய அரங்குகளுக்கும் இசைக் கூடங்களுக்கும் செல்கின்றனர்.

குழந்தைகளைப் பகல் நேரத்தில் கவனித்துக் கொள்ளும் நிலையங்களில் அன்றாடம் ஏறத்தாழ 4,64,000 குழந்தைகள் பராமரிக்கப்படுகின்றன. 9,06,000 குழந்தைகள் பள்ளிக்கூடங்களுக்குச் செல்கின்றன. 34,000 குழந்தைகள், மாலை நேரத்தில் நடைபெறும் இசை முதலிய கலைப்பயிற்சி வகுப்புகளுக்குச் செல்கின்றன.

மாசுகோவில் 30 தொழில்முறை நாடக அரங்குகள், 277 குமுகாய நல நிலையங்கள், 218 திரைப்பட அரங்குகள் 67 பழம்பொருட்காட்சியகங்கள், 68 விளையாட்டு அரங்குகள், 49 நீச்சல் குளங்கள், 411 மட்டைப்பந்து (ஆக்கி) விளையாட்டுத் திடல்கள், 101 பனிச்சறுக்கு நடுவங்கள் உள்ளன. 0

அன்பர்கள் கவனிக்க...

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5-மணிக்குமேல், எழுதி இசைவுபெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கொள்கிறோம்.

— அமைச்சர்.



1. விழிமலர்கள் : (பாடல்கள்)
ஆசிரியர் : ப. மணிவண்ணன்.
வெளியீடு : கங்கை நூலகம்; 29-வாலாசாசாலை, சென்னை-2.
பக்கம் : 96; விலை : உருபா 7.

21 பாடல்களும், தைப்பாவை என்றோரு சிறு பாவியமும் சேர்ந்த நூல் இது. உயர்ந்த கற்பனைகள், புதுப்பாடல் அமைப்பில் அமைந்து, படிக்கச் சுவை தருகின்றன. புதுப்பாடல்கள் என்பதால் தமிழ் நடையைப்பற்றிக் கவலை கொள்ளவில்லை. வடசொற்கள் வழக்குச் சொற்களாக நிறைந்து காணப்பெறுகின்றன. பூகம்பம், விஸ்வரூபம், பூபாளம், சம்காதரன், சுத்தம், சுயநலம், சமாதி, ஜீவிதம், தியாகம், இராஜ உடை, பவனி, ரசவாதம், சாகுவதம், பரிசுத்தம், உத்தரவாதம், ஜனநாயகம், வினோதசுகானுபவம், பிரசவம், சப்ரமஞ்சம், சரச சல்லாபம், பிரபஞ்சம் போன்ற புதுப்பாடல்களுக்கே சொந்தமான பன்னூற்றுக் கணக்கான வடசொற்கள் பாடல் தோறும் வந்து கலந்து—கற்பனை ஓவியங்களை வரையப் பயன்படுத்தப் பெற்றிருக்கின்றன மொழியை வளர்க்காத இலக்கியமும், இலக்கியத் திற்குதவாத மொழியும் எதற்குத்தான் பயன்படுமோ? புதுமரபுப் பாவலர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இடையிடையில் சிற்சில அழகிய பாடல்களும் இடம்பெற்று, ஆசிரியரின் தமிழறிவுத் திறத்திற்கும் தமிழ்ப் பற்றுக்கும் பாத்திறனுக்குக் கட்டியங் கூறுகின்றன. கீழுள்ள பாடல்களைப் பாருங்கள்! 'சிந்தனை' என்னும் தலைப்பில் உள்ளவை இவை :

எழில்நிறை மதியொளியே! எழுந்திடும் செங்கதிரே!
பொழில்தரு நறுமணமே! புதுப்புனல் வருநிதியே!
பழுதறு பொற்சிலையே! பகர்தலில் தென்மொழியே!
எழுதரும் பெண்ணழகே!—என் மனம்நிறை சிந்தனையே!

விண்மழை தருமுளிரே! வைகறைக் குயிலொலியே!
தென்மொழி தருநிறையே! தென்றமிழ்க் குலமகளே!
மண்ணிடை மணியொளியே! மலர்ந்திடும் நறுமலரே!
பண்தரும் மனநிறைவே!—என்—மனம்நிறை சிந்தனையே!

தைப்பாவை இனிய அழகிய சிறுபாவியம்! பாடல் உணர்வுள்ளவர்கள் வாங்கிப் படிக்கலாம்.

2. திரு. வி. க. கலம்பகம்
ஆசிரியர் : மருத்துவர் இறையரசன்.
வெளியீடு : இயற்றமிழ்ப் பயிற்றகம், திருவாரூர்.
பக்கம் : 40; விலை : உருபா. 3.

'தமிழ்ச் சான்றோர் திரு. வி. க. கலம்பகம்' என்பது நூலின் முழுப்பெயர். கலம்பகம் என்பது, மூன்று கோவையும், இருபத்தெட்டு மாலையும், ஆறு நிலையும், மூன்று வஞ்சியும், செய்யுள் மூன்றும், அந்தாதி மூன்றும், பத்து மூன்றும், வாழ்த்து மூன்றும், பாவியம் இரண்டு, பாட்டு இரண்டு, பஃது இரண்டு, மடல் இரண்டு மங்கலம் இரண்டு, மஞ்சரி இரண்டு, வெண்பா இரண்டு, இன்னிசை நேரிசை இரண்டிரண்டு ஆகியவற்றுடன், உலா, ஆற்றுப்படை, பிள்ளைத்தமிழ், பரணி, விருத்தம், வள்ளை, தூது, செவியறிவுறூஉ, தாண்டகம், பதிகம், சதகம், ஊசல், இருக்கை, பூ, இலக்கணம், காஞ்சி, காதல், கைக்கிளை, நாற்பது, குழமகன், கேசம், பாதம், பஞ்சகம், அயல், முதலிய தொண்ணூற்றாறு நூற்றொகை வகைகளுள் ஒன்று.

கலம்பக வகைக்கு, ஒரு போகு வெண்பாக் கலித்துறை முதலிய முதலுறுப்பாகக் கூறி, புயவகுப்பு மதங்கம், அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குலம், மறம், பாண், களி, சிந்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தாழை, ஊசல்—ஆகிய பதினெட்டு உறுப்புகளும் பொருந்திவர, மடக்கு மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, வஞ்சிவிருத்தம், வஞ்சித்துறை, வெண்டுறை என்னும் பாவகைகளால், இடையே வெண்பாவும் கலித்துறையும் மிடைந்து வரும்படி, இறுவாய்த் தொடையான் தொடுப்பது, என்பது இலக்கணம். இவற்றை வேறு வகையாகவும் உரைப்பர்.

பாவலர் திரு. மறையரசன் மேற்சொன்ன பதினெட்டு உறுப்புகளில் ஒரிரு மாற்றங்கள் செய்து, தோள், கைக்கிளை, தழை, வண்டு, ஊசல், அம்மானை, மறம், களி, குறிமகளிர், காலம், இரங்கல், கார், பாண், சம்பிரதம், தவம், செவியறிவுறூஉ, ஊர் என நிரல்படுத்திப் பிரிவுக்கு ஐந்தைந்து பாடல்களாகத் தொடுப்பும் முடிப்பும் இன்றி மொத்தம் தொண்ணூறு பாடல்களில் இந்நூலை யாத்துள்ளார். காலமாறுதல்களுக்கு ஏற்ப மாற்றம் தேவைதான். ஆனால் அந்த மாற்றம் இலக்கிய வளர்ச்சிக்கும் மலர்ச்சிக்கும் உதவுதல் வேண்டும். இல்லெனில் ஆளுக்கொரு மாற்றத்தைக் கைக்கொள்ளின் எதிர்மாறான விளைவுகளை உண்டாக்கி விடலாம் அன்றோ? பாவலரின் மாற்றம் அத்துணை முரண்பாடானதன்று. எனவே ஏற்கலாம்.

நூலின் கண்ணுள்ள பாடல்கள் பல மிகச்சிறந்து விளங்குகின்றன. ஓரிரண்டு எடுத்துக் காட்டுகள் :

கேண்மைமிகு தெய்வமெனப் பொதுமை கண்டோன்
கிளர்ந்தபல சமயத்தின் ஒருமை கண்டோன்
ஆண்மையொடு சாதிவெறித் தொழுநோய் நீக்கும்
அணிமுரசுங் கொட்டிவரும் ஐயன்; பெண்மை
பூண்டதொரு கோலமுகம் புதுமை வேண்டப்
பொதுமைக்கு முடிசூடுங் கையன்; அன்பால்
ஆண்டவனின் பெயர்சொல்லி ஆடீர் ஊசல்!
அணிமுலைப்பால் மலையருவி ஆவீர் மேவீர்! (26)

படங்கொண்ட அரவத்தின் பல்லிடையில் கைவைக்கும்
பாங்குடையான் போல வாங்கே
விடங்கொண்ட நோயுடலம் படர்கின்ற தலைவர்க்கு
விளவெல்லாஞ் சொல்ல வல்லீர்!
குடங்கொண்ட தேனென்று குளிர்ந்திட்டார், இன்றென்ன
குறைகண்டார்? அறிவீர்! உள்ளத்
திடங்கண்டு வருதற்கே உமையனுப்பி வைத்தனரோ
தரங்கெட்ட பாணர் தூதோ? (66)

சில பாடல்கள் படிப்பதற்கு மிகுசுவை யூட்டுகின்றன.

தொன்மைக்கு நிலைக்களனாய்த் தொழுங்கோயில் பெருமையொடே
அன்பூற்றாய் அருளாறாய்ப் பெருக்கெடுக்கும் புகழ்சேர்த்தே
இன்கிளிகள் பாட்டிசைக்க எழிற்பூக்கள் கேட்டிருக்கும்
கன்னலெனுஞ் சுவையாரூர்க் கலைநிலையத் திருமகன்,நீ!
(வாழ்த்து)

மருத்துவராய்ப் பணிசெய்தும் இலக்கியநூல் பல செய்யும் பாவலரின் மிகுதிறம் பாராட்டுக்குரியது; ஊக்குதற்கும் உரியது. 'நோய் நானூறு', 'பிணிச்சிந்து' போலும் சில மருத்துவப் பயன்களையும் இலக்கியமாய் வடித்துள்ள நம் பாவலர் மறையரசனின் வாழ்வியல் நோக்கம் பெருமை மிக்கது, பீடுசான்றது. மருத்துவர் மறையரசன் வாழ்க! அவர் முயற்சி வெல்க. 0

தமிழ் வளர்ச்சிக்கு ஒரு புத்தாக்க நூல்!

சொல்லாய்வறிஞர் ப. அருளி அவர்களின்

இவை தமிழல்ல

(அயற்சொல் அகராதி)

விலை 10-00; அஞ்சல் செலவு: 1-00; பதிவஞ்சல் செலவு: 5-00

இந்திய அரசே இன்னுமா உறக்கம்?

(இலங்கைத் தமிழரின் அவலநிலை விளக்க நூல்)

விலை: 5-00; அஞ்சல்செலவு: 1-00; பதிவஞ்சல்செலவு : 5-00

அறிவன் பதிப்பகம்: 2/5, காளிகோயில்தெரு, தமிழூர்-புதுச்சேரி-9.

தமிழீழத்தை அமைக்க அனைத்துத் தேசச் சட்டம் தடையாக இருக்கிறதா?

— மலர் மாறன்

சில மாதங்களுக்கு முன்னல் இலங்கைப் படையில் கொடுமைகள் மறுபடியும் அதிகரித்தன. அப்போது, தாம் விடுதலைப் புலிகளை கண்டு பேசப் போவதாகக் கருணாநிதி கூறினுர்.

உடனே எம்.சி. இராமச்சந்திரன் ஓர் அதிரடி அடித்தார். அட்டைக்கத்தி வீரர் தஞ்சை மாவட்டத்தில் ஒரு கூட்டத்தில் தாம் திரைப்பட உரைகளை அள்ளிவிட்டார். தாமும் விடுதலைப் புலிகளைச் சந்திக்கப் போவதாகவும், இலக்கக்கணக்கான அ.தி.மு.க. தொண்டர்கள் இலங்கைக்குச் சென்று போரிட அணியம் என்றும், அவர்கள் சிங்களப் படையினரின் துமுக்கிகளைப் பிடுங்கியே அவர்களை எதிர்த்து அழிப்பார்கள் என்றும் ஏமாற்று முழக்கமிட்டார் எம்.சி. இராமச்சந்திரன்.

தமிழக முதல் அமைச்சரின் இந்தப் பேச்சை உண்மையென்று நம்பி ஈழத்திலே இருந்து விடுதலைப் புலிகள் பலர் தமிழ் நாட்டிற்கு வந்தனர்.

அவர்கள் இங்கு வந்த பின்னர்தாம் தமிழ்மக்களை ஏமாற்றுவதற்காக எம்.சி. இராமச்சந்திரன் ஆடிய நாடகம் அஃது, என்பதைக் கண்டுகொண்டு திரும்பிப்போனுர்கள். திரும்பிப்போகும் வழியில் 14 ஈழத்தமிழ் இளைஞர்கள், இலங்கைப் படைத்துறையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

கடைசியில் 'இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற, இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று அ.தி.மு.க.வின் செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றி, இந்திரா காந்திக்கு அனுப்பிவிட்டார் எம். சி. இராமச்சந்திரன். ஈழத்தமிழர்களைக் காப்பாற்ற அவர் எடுத்த நடவடிக்கை அவ்வளவுதான்.

இப்படி அடுக்கடுக்கான குழப்ப உரைகளையும் ஏமாற்றுச் செயல்களையும் எம்.சி. இராமச்சந்திரனும் அவரின் ஆதரவாளர்களும் செய்து கொண்டு இருப்பதால், தமிழக மக்கள் குழப்பப்பட்டுச் சரியாகச் சிந்திக்க முடியாமல் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

தமிழ் இனத்தைக் காக்க இருக்கும் தமிழக முதல் அமைச்சர் சரியாகச் செயல்பட்டால்தான், ஈழத்தமிழ் இனத்தைக் காப்பாற்ற முடியும். அவர் எப்படிச் செயல்பட வேண்டும்?

ஒரு வழி......!

ஈழத்தமிழகத்தில் உள்ள இளைஞர்கள் 10 இலக்கத்திற்கும் மேற்பட்டோர் இருக்கிறார்கள் அவர்களில் ஓர் இரண்டு இலக்கம் பேரைத் தமிழகத்திற்கு வரவழைக்க வேண்டும். அவர்களுக்குப் படைத்துறைப் பயிற்சி கொடுத்துத் துமுக்கிகளையும் வெடிகுண்டு களையும் கொடுத்து இலங்கைத் தீவிலே இறக்கிவிட வேண்டும். அவர்கள் ஈழத்தமிழ் நாட்டுப் பகுதிகளில் உள்ள இலங்கைப் படையை விரட்டி அடித்து, ஈழத்தமிழ் நாட்டு அரசை அமைப் பார்கள்.

இலங்கைப் படையில் இப்போது 40,000 படை வீரர்கள் இருக்கின்றார்கள். இப்போது மேலும் 4,000 பேருக்குப் பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கின்றது, இலங்கை அரசு.

இலக்கம் ஈழத்தமிழ் விடுதலைத் தொண்டர் படையைக் கண்ட வுடன் இந்த 44 ஆயிரம் சிங்களப் படை வீரர்களும் 'தலை தப்பியது தம்பிரான் பேறு', என்று தலை தெரிக்க ஈழத்தமிழகப் பகுதிகளி லிருந்து ஓட்டமெடுப்பார்கள். அப்படி ஓடாத சிங்களப் படை வீரர்களை 'எம'னுலகம் அனுப்பிவிட்டு ஈழத்தமிழ் நாட்டை அந்தத் தொண்டர் படை அமைக்கும்.

தமிழக அரசு இப்படிச் செயல்பட்டால் ஓரிரு நாள்களில் ஈழத்தமிழ் நாடு விடுதலை அடைந்துவிடும்.

அமெரிக்கா என்ற நாட்டின் பக்கத்தில் நிகராகுவா என்றொரு நாடு இருக்கிறது. அந்த நாட்டின் அரசு, அமெரிக்க அரசின் கொள்கைகளுக்கு வேறாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆகவே, நிகராகுவா நாட்டிலுள்ள அரசைக் கவிழ்த்து, அதன் ஆட்சியை வீழ்த்த ஏறத்தாழ 8000 நிகராகுவா நாட்டுவீரர் களுக்கு அமெரிக்கா அரசு படைத்துறைப் பயிற்சி கொடுத்துப் படைத் தளவாடங்களையும் கொடுத்து, நிகராகுவா நாட்டின் உள்ளே அனுப்பி வைத்துள்ளது. அதற்காக அமெரிக்க அரசு 21 கோடி உருபா செலவு செய்துள்ளது.

நிகராகுவா நாட்டிலே அமெரிக்கர்கள் யாரும் கொல்லப்பட வில்லை. அமெரிக்க மக்கள் கொடுமைப்படுத்தப்படவில்லை, அப்படி இருந்தும் 8000 தொண்டர்களுக்குப் படைப் பயிற்சியும் தளவாடங் களும் கொடுத்துப் போரிடுமாறு ஏற்பாடு செய்துள்ளது அமெரிக்க அரசு.

இலங்கையிலே தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஈழத்தமிழ் இனத்தையே அழித்து விடுவேன் என்று செயவர்த்தனா கொக்கரித்துக் கொண்டு இருக்கின்றார்.

கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழர்களைக் காப்பாற்றிட தமிழக அரசு ஈழத்தமிழர் விடுதலைத் தொண்டர் படையை

அனுப்புவது நயன்மைக்குப் புறம்பாகாது, அப்படித் தொண்டர் படை அனுப்புவதை இந்திய அரசு கண்டும் காணுதது போல இருந்து கொள்ளும். ஒரு தீ நிலையாக இந்திய அரசு நடவடிக்கை எடுத்தாலும் என்ன செய்து விடப்போகிறது? அதிக நடவடிக்கை யாகச் சட்டமன்றத்தைக் கலைப்பர்கள். அடுத்த தேர்தலில் மறுபடி யும் ஆட்சியைப் பிடித்துக் கொண்டால் போகிறது.

விடுதலைப் புலிகளுக்குப் பயிற்சி கொடுத்து அனுப்புவதைக் காரணம் காட்டி அமெரிக்காவே அல்லது வேறு நாடுகளோ தங்களின் படைகளை இலங்கைக்கு ஆதரவாக அனுப்பி வைக்க மாட்டார்கள். அப்படி அனுப்பினுல் உலகத்தின் கருத்து அவர் களுக்கு எதிராகத் திரும்பும். அந்த நிலையை எந்த நாடும் விரும்பாது.

தப்பித்தவறி அமெரிக்கா தனது படையினை அனுப்பினது என்ருல், உடனே இந்தியப் படைத்துறை அதை எதிர்த்துப் போரிட வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுவிடும். ஏனெனில் எந்த அயல்நாட்டுப் படைத்துறையும் இந்தியாவின் தென் பகுதிக்கு வரக்கூடாது என்று இந்தியா கூறிக்கொண்டிருக் கின்றது. அமெரிக்கப் படைத்துறை இலங்கைக்கு வந்தால் இந்தியாவின் அந்த நிலைக்கு எதிரானதாக இருக்கும்.

அதனுல் இலங்கைக்கு வந்த அமெரிக்கப் படையை எதிர்க்க இந்தியப் படை இலங்கை நோக்கிச் செல்லும். இந்தியாவிற்கு ஆதரவாக உருசியப் படை வரும். அப்போது 'ஆப்பை உருவி மர இடுக்கில் மாட்டிக் கொண்ட குரங்கு கதை' போன்ற நிலை அமெரிக்காவிற்கு ஏற்பட்டு விடும்.

இவற்றையெல்லாம் முன் கூட்டியே எண்ணிப் பார்த்து அமெரிக்கா தனது படையை இலங்கைக்கு அனுப்பாது.

8000 தொண்டர்களுக்குப் பயிற்சி கொடுத்து நிகராகுவா நாட்டிற்குள்ளே அனுப்ப அமெரிக்காவிற்கு 2 கோடி உருபா செலவாகியிருக்கின்றது அந்தக் கணக்குப்படி 2 இலக்கம் விடு தலைப் புலிகளுக்குப் பயிற்சி கொடுத்து இலங்கைக்குள் அனுப்ப 525 கோடி உருபா தேவைப்படும்.

தமிழக அரசின் ஆண்டு வருமானம் 2000 கோடி உருபாய்க்கும் அதிகமாக இருக்கின்றது. அதில் நான்கில் ஒரு பங்கை ஒதுக்கினுல், இந்த 525 கோடி உருபா கிடைத்து விடுகின்றது.

தமிழகம் தனது வருமானத்தில் கால் பகுதியை ஒரே ஓர் **ஆண்டு மட்டும் செலவிட்டால் நமது ஈழத்தமிழர்களைக் காப்பாற்றி அவர்கள் வாழ ஈழத்தமிழ் நாட்டை அமைத்துக்கொடுத்து விடலாம்.**

மறுபடியும் மாந்தனைக் குரங்காக்கி விடவேண்டாம்!

கொடுமுடி. க. அ ஒளியவன்

1. செருப்புக்குத் தக்கவே காலைக் குறைப்பதா?
சிறுகுல்லாய் வைக்கவே தலையை மழிப்பதா?
பொருத்தமில் லாதெ ரு கச்சினுக் காகவே
பூவையள் முலையினை அறுத்திடு கின்றதா?
வருத்தமில் லாமலே தட்டச்சுக் காகவே
வண்டமிழ் மொழியின் எழுத்துக ளெல்லாம்
திருந்துவ தாகச் சிதைத்திடு கின்றதேன்?
தேனிலே நஞ்சைக் கலந்திட லாகுமோ?

2. 'மெல்லத் தமிழினிச் சாகும்' என்றனன்.
மேன்மைப் பாவலன் பாரதி அன்று!
வெல்லத் தமிழிதை மிகுவிரை வாகவே
வீழடிக் கின்றனர் தமிழரே இன்று!
நல்லதைச் செய்யாது விடினும்—அல்லதை
நடத்தாது விடுதல் பண்பா டாகுமே!
எல்லாமும் செய்ய வல்லவன் தமிழின்
எழுத்தினைச் சிதைக்காமை ஏன்செய்ய வில்லை?

3. தமிழ்சால் எழுத்தை மாற்றிடு கின்றவன்;
தலையின் எழுத்தினை மாற்றிடு வானா?
அமிழ்தொடு நஞ்சைக் கலந்திடு கின்றான்;
அறியாமை யேபகுத் தறிவென் கின்றான்!

(முன் பக்கத் தொடர்ச்சி)

தொண்டர் படையை எப்படி அனுப்புவது என்ற முழு விளக்கங்கள் ஈழத்தமிழ் நாடு விடுதலை அடைய வழி என்ன?' என்று நாம் எழுதப்போகும் இன்னொரு கட்டுரையில் விளக்கமாகக் கூறப்பட்டு உள்ளன.

தமிழகத்தின் முதன் அமைச்சராக விருக்கும் எம்.சி இராமச் சந்திரன், தமிழக அரசின் முதல் கடமையான, தமிழ் இனத்தைக் காப்பாற்றும் கடமையை நிறைவேற்றாமல் இருப்பதால், தமிழர்கள் ஈழத்திலே ஆயிரக்கணக்கில் படுகொலைகள் செய்யப்படப்பட்டுக் கொண்டேயிருக்கின்றனர். எம்.சி. இராமச்சந்திரன் நீக்கப்பட்டு ஒரு தமிழன், தமிழக முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் தான், ஈழத்தமிழர்களைக் காப்பாற்ற முடியும். இதை உணர்ந்து தமிழர்கள் எல்லாம் ஒன்று பட்டுச் செயல்பட்டால்தான் ஈழத்தமிழ் இனத்தைக் காப்பாற்ற முடியும்.

ஈழத்தமிழ் நாடு விடுதலை அடைவதை அனைத்துத் தேசச் சட்டம் தடுத்துக் கொண்டிருக்கவில்லை. தமிழகத்தில் ஒரு தமிழன் முதல் அமைச்சராக இல்லாத நிலைதான் தடுத்துக் கொண்டிருக்கின்றது.

(முற்றும்)

Scanned with CamScanner

இழிவிது போலவே வேறெதும் இல்லை;
ஏனைய மொழியினர் இதுசெய்ய வில்லை!
விழியைக் கெடுக்கிறான் அடியை அணிய!
வெந்துய ரே,இது! பேரிடர் அந்தோ!

4. இருப்பதை முழுதாய்க் கற்றிடு தற்கே
இயலா திருக்கும் நிலையில் மேலும்
இருப்பதைச் சிதைத்திடு கின்றதால் அவனவன்
இதுவரை மருந்தாய்க் கற்றுவைத் ததையும்
மறப்பதும் ஆகுமே! மனமதில் பற்றிலா
மற்றதில் அறிவை நாடிட விடுவான்!
இறப்பதும் இதனினும் மிகமிக மேலென
எண்ணுவான்! வேறென்ன எண்ணுவா னிங்கே?

5. எண்ணத்தைத் திருத்த முன்வரா திங்கே
எழுத்தைத் திருத்த முற்பட்ட தேனோ?
என்னவும் திருத்திட லாமென்னும் நினைப்போ?
எவரும் தேவர் அனையவர் தாமோ?
முன்னை யெத்தனை யெத்தனை யோபல
மூண்ட சூழ்ச்சிகள் மீண்டு வென்றிட்ட
அன்னைத் தமிழுக்குப் பின்னையும் மிகுதுயர்
அனைத்தும் வென்று சிறப்பமிப் பாரினே!

6. தமிழனே தமிழைக் கொலைசெய் கின்றான்!
தனித்தமிழ்ச் சொற்களைக் கொன்றுமே தின்றான்!
தமிழ்எழுத் தினையும் கொன்றிட வந்தான்!
தலையில் லாதொரு முண்டம்தா னென்றான்!
அமிழ்தினும் இனியநம் தமிழினைக் கெடுக்க
ஆட்சி யாளரும் சூழ்ச்சிவாய்ப் பட்டார்!
'உமிழ்ந்திடு பாப்பா' என்கிறான் பாரதி!
உடனே செய்திட லாமோ இதனையே!

(வேறு)

7. வேண்டாத பேரெல்லாம் குழுகா யத்தில்
விலகாமல் இருந்துவரு கின்ற போது
வேண்டாமே என்றுசில தமிழ்எ ழுத்தை
விலக்குவதால் இனித்தமிழும் உயருமாமோ?
வேண்டாமே தமிழெனினும் தாழ்வும் இல்லை;
வேரூன்றி வனப்பளிக்கும் தமிழ்எ ழுத்தை
வேண்டாமே வேண்டாமே என்றே நாளும்
வீழ்துயரம் மிகச்செய்து வரவேண் டாமே!

8. கைகளிலும் கால்களிலும் பப்பத் தாகக்
காண்கின்ற விரல்களுமே தேவை தாமோ?
கொய்திடலாம் அவற்றினிலே சிலவும்! பற்கள்
கூடத்தான் முப்பத்தி ரண்டெ தற்கோ?

விதியும் மதியும்

நாடக ஆசிரியர்: அதியமான்

அமை : அவர்களுடைய ஆற்றலால் முட்டாள்கள் மிகுதியாகி விடக்கூடாதே.

நெடுஞ்சேர : அதைப்பற்றிக் கவலையில்லை. பல முட்டாள்களைக் கொண்ட நாட்டில் சில அறிவாளிகள் இருந்தால்போதும்.

அமை : மன்னா! ஓர் ஐயம்.

நெடுஞ்சேர : என்ன ஐயம் ?

அமை : நீங்கள் சொல்வதிலிருந்து பார்த்தால், இந்த நாட்டில் உள்ள கோவில்கள், அங்குக் குடியிருக்கும் கடவுள்கள் அதன் தொடர்பான பழக்கவழக்கங்கள் யாவும் மூடத்தன்மையுடையவை தாமா ?

நெடுஞ்சேர : அமைச்சரே, சூழ்ச்சியின் திறத்தைச் சொல்ல வேண்டிய உமக்கு, நாம் சொல்லவேண்டியதிருக்கிறதே, கேளும். அமைச்சரே, ஒரு நாட்டில் நல்ல மழையும் நல்ல

(முன் பக்கத் தொடர்ச்சி)

இரண்டெதற்குக் கண்கள்?கா திரண்டெ தற்கோ?
இருதுளைகள் மூக்கில்தாம் எதற்கோ? எல்லாம்
நிரலாகக் குறைத்திடலாம் அன்றோ? இங்கே
நிலைத்துள்ள தமிழெழுத்தைக் குறைத்தல் போலே!

9. எண்ணற்ற வுடைமைகளைச் சேர்ப்ப தற்கே
எண்ணிக்கொண் டிருந்திடுவான்; அவற்றில் கொஞ்சம்
நன்கொடையாய்க் குறைப்பதற்கே இசைய மாட்டான்!
'நான்'என்பதென் னும்செருக்கை விடவும் மாட்டான்!
தன்னலத்தைக் குறைக்காமல் இருப்பான், ஆனால்
தமிழெழுத்தைக் குறையென்றே குரைப்பான், நாளும்!
இன்னலையே நாட்டுக்கும் மொழியினுக்கும்
இவன்விட்டுச் சென்றிடுவான் பெரும்பே றென்றே!

(வேறு)

10. தனித்தமிழை வாழவிடு! இல்லையென்றால் உள்ள
தமிழ்கெடுக்கா திருந்துவிடு! வேண்டுகிறோம் உன்னை!
இனிக்கவில்லை தமிழென்றால் விட்டுவிடு! உனக்கே
ஏற்றதொரு மொழிபடித்தே உயர்ந்திடுக, வாழ்வில்!
மாந்தனைநல் மாந்தனெனத் தெய்வமென ஆக்கும்
மாத்தமிழை அதன்எழுத்தை நீ,கெடுத்துப் பின்னும்
மாந்தனைமுன் போல்குரங்காய் ஆக்கிவிட வேண்டாம்!
மாறாமல் விளங்கட்டும் தமிழ்எழுத்தே என்றும்!

விளைவும் இல்லாமைக்கு அரசுதான் காரணியம் என்ற நெறி ஒன்று உண்டு, அஃது உமக்குத் தெரியுந்தானே?

அமை : ஆமாம். மழையை எதிர்பார்ப்பது போல மன்னவனின் செங்கோலையும் எதிர்பார்ப்பர் மக்கள் என்ற நெறி கூட. சொல்லப்படுகிறதே. அஃது எனக்குத் தெரியும்.

நெடுஞ்சேர : அது தெரியும் அன்றோ? மன்னனிடம் நெறியில்லை என்பதால் மழையில்லை என்ற எண்ணம் மக்களிடம் தோன்றி விட்டால், நம்முடைய நிலை என்ன ஆகும்?

அமை : என்ன ஆகுமா? வளமனையில் நாம் இருக்கமுடியாது.

நெடுஞ்சேர : உம் அதனால்தான் மழை வேண்டுமா? கடவுளைக் கேள் என்று சொல்லி மக்களுடைய எண்ணத்தைத் திசை திருப்பிட வேண்டும்.

அமை : கடவுளைக் கேட்டும் மழைபொய்யவில்லை என்றால், அரசு மீது ஓர் எண்ணம் வருமே.

நெடுஞ்சேர : அதற்குத்தான் கடவுள்களுக்குச்செய்யும் வழிபாடுகளை அவர்கள் சரியாகச் செய்யவில்லை என ஒரு குற்றத்தை மக்கள் மீதே திணித்துவிடவேண்டும். அதற்காகத்தான் நம் அவைக்கு வந்த குறிஞனை விட்டுவைத்தேன். கண்ணோட்டம் காட்டினேன்.

அமை : அப்படியானால், இங்குள்ள கோவில்கள், அவற்றிற்குச் செய்யும் விழாக்கள் யாவும் மக்களைத் திசை திருப்பத்தான்?

நெடுஞ்சேர : ஆமாம்... ஆமாம் .. ஆமாம் கடவுள்கள், கோவில்கள் படைப்பெல்லாம் மக்களுக்குத்தாம். மாந்தனே இவற்றைப் படைத்தவன்.

அமை : மாமன்னா! சினக்கவேண்டா. ஓர் ஐயம்

நெடுஞ்சேர : என்ன ஐயம்?

அமை : அஃதாவது, மன்னா, மக்கள் யாவரும் இப்படி ஒரு மூட எண்ணத்தில் அலைந்தால் நாட்டின் அறிவு மங்கும் என நான் கருதுகிறேன்.

நெடுஞ்சேர : அந்த நிலை இப்போதைக்கு தமிழ் நாட்டில் வராது. இன்னும் பல நூற்றாண்டுகள் கழித்துத்தான் வரும். அதற்கான வேலைகளை இந்தக் குறிஞனின் கூட்டம் செய்து கொண்டே இருக்கும். அப்போது நாம் இருக்கமாட்டோம்.

அமை : மன்னா, நாம் இருக்கமாட்டோம். ஆனால் நம் பிள்ளைகள் நம்மைத் தூற்றமாட்டார்களா?

நெடுஞ்சேர : ஆம். அதையும் நான் உணருகிறேன். அதற்கு எடுத்துக்காட்டாக இளங்கோவின் துறவு அமைந்துள்ளது. அல்லவா? அதைத் தமிழர்கள் உணர்ந்தாலே போதும்]

அமை : அப்படியானல் இளங்கோவின் துறவு தமிழர்களுக்கு ஒரு படிப்பினை என்கிறீர்களா ?

நெடுஞ்சேர : ஆம் நல்லபடிப்பினை. விதியை மதியால் மாற்ற முடியும் என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டு. தமிழர்கள் இதை மறத்தல் கூடவே கூடாது.

அமை : இந்தப் படிப்பினையைப் படித்துக்கொள்ள வேண்டுமே,

நெடுஞ்சேர : அமைச்சரே! இதுமட்டுமன்று. நம் தமிழ் நாட்டு அறிஞர்கள் இப்படி எத்தனையோ அறிவுரைகளையும் வாழும் நெறிகளையும் எடுத்துக்கூறி ஏடுகள் எழுதியுள்ளனர்; அதை அவர்கள் கற்று அதன்படி நடக்கவேண்டும்.

அமை : அதற்கு என்ன வழி செய்வது?

நெடுஞ்சேர : அதற்காகத்தான் கல்வி நிலையங்களைக்கட்டிக் இருக்கிறோம். கருத்துகளை எடுத்துச்சொல்ல கற்ற ஆசிரியர் களை அமர்த்தியிருக்கிறோம். கற்றுக் கொடுக்கக் கூறி இருக்கிறோம்.

அமை : அவற்றைக் கற்க வேண்டும்?

நெடுஞ்சேர : கற்பது கற்கச் செல்லுபவரின் கடமையல்லவா : கற்க. நடக்க என்பதை உணர்ந்து நடப்பது அவரவர்களின் கடமையல்லவா?

அமை : ஆம் !

நெடுஞ்சேர : அமைச்சரே. இளங்கோவின் துறவு நமக்குத் துன்பந் தந்தாலும், அவன் கற்ற கல்வி, இந்தத் தமிழகக் குமுகாயத்திற்கு பயன்படுமேயானல் மிகச் சிறப்பான வரலாற்றைப்படைக்கும். கல்வியும், கற்றதைப் பிறருக்கு இயம்புவதும், அதனைக்கேட்பதும் சிறந்த செல்வங்கள்; விதி மதியை அணுக இயலாது விதியை மதியால் வெல்ல இயலும் என்பதைத் தன் துறவால் சான்றுகாட்டி விட்டான். இளங்கோ! அறிவு பெறுவதே தமிழருக்கு முகாமை என்பதை அறிவித்துவிட்டான். கலை பார்ப்பது (சாத்திரம் பார்ப்பது) ஒரு நுகரும் கலை. அவ்வளவுதான்; மாந்தனுடைய வாழ்க் கையை அஃது எதுவும் செய்திடல் ஆகாது என்பதை இளங்கோ இன்னும் தமிழருக்கு உணர்த்துவான். அதற் காகவே துறவை அவன் மேற்கொண்டுள்ளான். எனவே அவன் துறவு நலமாக முடியும். இத்தோடு அவை கலைகிறது ......ஓ! அக் கணியன் எங்கே ?

அமை : அறிவோடு எதிர்க்க முடியாமல் ஓடி விட்டான்.

நெடுஞ்சேர : அறிவு வெல்லட்டும்!

(முற்றும்)

பயிற்றுசிரியர் ஒருவரின் கருத்து

தமிழ்ப் பயிற்றுமொழி.

— நா.கு. பொன்னுசாமி க மு;கல்.இ

தமிழ்ப் பயிற்று மொழிக்குப் பெற்ருேர், மாணவர் ஆகிய இரு தரப்பாரும் ஆதரவு தெரிவிக்கவில்லை என ஒரு செய்தியைச் செய்தித்தாள்களில் கண்ணுற்ருேம்

மேலோட்டமான விருப்பு வெறுப்புகளையும் பகட்டுத் தன மான உணர்வுகளையும் ஒதுக்கிவைத்துவிட்டு, இச்சிக்கலை ஆராய வேண்டும். ஆராயும் முறைகளும் நம்பகம் (Reliability) உடை யவையாக இருக்க வேண்டும்.

தமிழகத்தில் மட்டுமே மாநில மொழிவழிக் கல்வி இருப்பது போல் பலரும் பேசுகிருர்கள். இந்திய நாட்டின் எல்லா மாநிலங் களிலும் பல்கலைக் கழக மட்டத்தில் மாநில மொழியைக் கற்கும் 'வாயிலாக' (Media) பயன்படுத்துவது இருக்கத்தான் செய்கிறது. ஆனல், அங்கெல்லாம் இஃது ஒரு சிக்கலாக அமையவில்லை. தமிழகத்தில் மட்டுமே இ'து ஒரு சிக்கலாக மாற்றப்பட்டு வருகிறது.

இன்று, தமிழ்நாட்டில் தமிழில் மட்டுமே கற்ருக வேண்டும் என யாரும் வற்புறுத்தப்படுவதில்லை. 'தமிழிலும் கற்கலாம்' என்னும் நிலைதான் இருந்து வருகிறது. மருத்துவக் கல்லூரி யிலோ பொறியியற் கல்லூரியிலோ தமிழ்வாயிலாகக் கற்பிக்கும் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டால், ஆர்வம் உள்ளவர்கள் மட்டும் சேர்ந்து கொள்ளட்டுமே. ஆங்கில வாயிலாகவே கற்கவேண்டும் என விரும்புகின்றவர்களுக்கு என்ன இடையூறு ஏற்படடுவிடும்?

விருப்பம் இல்லாத மாணவர்களையும் கட்டாயத்தின்பேரில் தமிழ் வாயில் வகுப்புகளில் சேர்க்கமாட்டார்களா எனவும் வினவலாம். சில நேரங்களில் நடைமுறைச் சிக்கல்களால் அந்த நிலைமை ஏற்பட்டுவிடவும் வாய்ப்பு இருக்கத்தான் செய்கிறது. மறுப்பதற்கில்லை; இதற்கு வேறு வகையில் மாற்றுவழி ஒன்றைக் காண முயல்வது நலம் பயக்கும்

மாணவர்களை ஒரு படிப்பில் சேர்க்கும்போதில் ஆங்கில வாயில் தமிழ்வாயில் எனப் பிரித்து எடுக்காமல் மொத்தமாகவே எடுத்துக் கொள்ளலாம். ஆனல் வகுப்புகள் மட்டும் வெவ்வேறு நேரங்களில் ஆங்கில வாயிலாகவும், தமிழ் வாயிலாகவும் நடத்தப் பட வேண்டும் மாணவர்கள் தாம் விரும்பும் எந்த வகுப்பிலும், அல்லது ஒரே பாடத்தை இரு மொழிகளின் வாயிலாகவும் கேட்கும்படி வழிவகை செய்ய வேண்டும். அஃதாவது ஆங்கில வாயிலான வகுப்பு ஒரு பாடத்திற்கு நடக்கும் நேரத்தில் அதே பாடத்திற்குத் தமிழ்வாயிலான வகுப்பு நடைபெறக் கூடாது. ஒரு மொழியின் வாயிலாக நிறைவு பெருத மாணவன் மற்ருெரு மொழிவாயிலாகவும் அதே பாடத்தைக் கேட்க வாய்ப்பிருக்க

Scanned with CamScanner

வேண்டும் இன்றுள்ளது போலவே கேள்வித்தாள்கள் இரு மொழியிலும் இருக்கலாம். ஆனால் எந்தக் கேள்விக்கும், மாணவன் விரும்பும், எந்த மொழியிலும் (முதற் கேள்விக்கு ஆங்கிலத்தில் விடையளித்துவிட்டு, அடுத்த கேள்விக்குத் தமிழில் விடையளிக்கக் கூடிய வகையில்) விடையளிக்கும் வாய்ப்பு தரப் பட வேண்டும் இதன்மூலம் பாடப்பொருளில் தேர்ந்த திறமும், இரு மொழிகளிலும் மொழித்திறமும் வளர வாய்ப்பு ஏற்படும். கற்கும் பருவத்திலேயே திறமையுள்ள மாணவர்களை மொழி பெயர்ப்புப் பணிகளிலும் ஈடுபடுத்தலாம். மொழி பெயர்க்கும் பணியால், பாடப் பொருளிலும் ஆழ்ந்த தோய்வு அவர்களுக்கு ஏற்படும்.

தம் அறிவையும் திறமையையும் பயன்படுத்திச் சிறப்பான செயல்களைச் செய்துகாட்டுவதற்குரிய வாய்ப்பை மாணவர் களுக்கு வழங்கினால், எத்தனையோ கலவரங்களும் அமைதியின்மை யும் இருந்த இடம் தெரியாமல் மறையும். ஆக்கமுறையான பயன் விளையும்.

இன்று, கலை அறிவியற் கல்லூரிகளில் மாணவர் பலர் ஆங்கில வாயில் வகுப்புகளில் சேர்கின்றார்கள். முழுத் தேர்வையும் ஆங்கி லத்திலோ தமிழ்மூலமாகவோ எழுதிக் கொள்ள அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. (ஒரு தாளில் ஒரு வினாவைத் தமிழிலும் ஒரு வினாவை ஆங்கிலத்திலும் என எழுத இயலாது) இதனால், ஆங்கிலத்தில் கற்பதை உயர்வாகக் கருதியும், ஆங்கில மூலமாகப் படிக்காவிடில் மதிப்புக் கிடைக்காது என நம்பியும் ஆங்கில வாயில் வகுப்புகளில் சேர்ந்த மாணவர்கள் பலர், சேர்ந்த சில நாள்களிலேயே தமிழ்வழிப் புத்தகங்களை வாங்கி வைத்துக் கொண்டு படிப்பதையும் தேர்வின்போது முழுவதும் தமிழிலேயே விடை எழுதுவதையும் எல்லாக் கல்லூரிகளிலும் பரவலாகக் காணலாம். ஆனால், இவர்கள் யாவரும் ஆங்கில வழி வகுப்பு களில் அமர்ந்து கொண்டிருந்தவர்களே என்பதை நாம் மறக்கக் கூடாது.

இவர்களைக் கேட்டாலும், ஆங்கில வாயிலாகக் கற்பதைத் தான் விரும்புகிறோம் என்று கூறுவார்கள். ஆனால், பெயருக்குத் தான் ஆங்கில வாயில் வகுப்பில் அமர்ந்திருக்கிறார்களே தவிரப் படிப்பதோ தமிழ் வாயிலாகத்தான்! தேர்வு எழுதி வெற்றி பெறுவதும் தமிழ் வாயிலாகத்தான்.

உண்மையான ஆய்வு என்பது, வெறும் வாய் விருப்பங்களை அறிவது மட்டுமே அன்று. மன விருப்பங்களையும் அறிய வேண்டும். கல்லூரி தோறும் சென்று, தீர வினவி, மாணவர்கள் எந்த மொழியில் பயில்கிறார்கள். எந்த மொழி நூலைப் பயன்படுத்து கிறார்கள். எந்த மொழி அவர்களுக்கு ஏற்புடையதாக இருக்கிறது என்பதை உற்று நோக்க வேண்டும். பல்கலைக் கழகத் தேர்வு விடைத்தாள்களில் எந்தமொழி மூலமாக அதிகம் விடையளிக்கப் பட்டுள்ளது என்பதைக் கணக்கிட வேண்டும். அப்போதுதான்

Scanned with CamScanner

பாடமொழிச் சிக்கலின் உண்மையான பரிமானங்களை அறிந்து கொள்ள முடியும். கல்லூரிப் பதிவேடுகளை மட்டுமே கொண்டு மாணவரின் பாடப் படிப்பு மொழியைத் தெரிந்து கொள்வது கடினம். இந்த வகையில் இளங்கலை, இளம் அறிவியல் பாடங்களை ஆங்கிலம் மூலம் பயிலக் கருதிச் சேர்ந்த மாணவர்கள் பலரும் தமிழ்வழி நூல்களையே பயின்று தமிழில் தான் தேர்வு எழுதுகிறார்கள் என்பது கண்முன் காணும் உண்மை. உண்மையான ஆர்வலர்கள் — ஆய்வாளர்கள் மேலும் கள ஆய்வுகளை மேற்கொண்டு உண்மைகளை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

பொதுவாக, மாணவர்கள் முதலில் ஒரு செய்தியைத் தமக்கு நன்கறிந்த மொழி மூலம் தெரிந்து கொள்ளவே விரும்புகிறார்கள். அப்படித் தெரிந்துகொள்வதுதான் சிந்தனை தூண்டப்படுவதற்கு ஏதுவாகிறது. புரியாத நன்கு பயிலாத ஓர் அயல்மொழியிலறிய முற்படும் போது, சொல் விளங்காமை, வழக்காறு விளங்காமை, செய்தி தெளிவுபடாமை, எடுத்துரைக்க எளிதில் இயலாமை எனப் பலவாறு திண்டாடி, இறுதியில் புரியாமலே மனப்பாடம் செய்யத் தொடங்குகிறார்கள். இந்த ‘முறை’யானது சிந்தனைக்கு இடம் கொடாத, தேர்வுக்கு மட்டுமே உரிய படிப்பாகக் கல்வியை மாற்றி விடுகிறது. நீண்ட முயற்சியால் மொழிச் சுவரைக் கடப்பதற்குள் அவன் சோர்ந்து விடுகிறான். அதனால் தமிழ் மூலமே கற்கும் போது இந்தத் தடைச்சுவர் குறுக்கிடுவதில்லை.

ஆங்கிலம் வாயிலாகக் கற்றதால் இங்கு அறிஞர்கள் இல்லையா? திறமைசாலிகள் இல்லையா? வல்லுநர்கள் இல்லையா எனவும் கேட்கிறார்கள். இருக்கிறார்கள்; பலர் இருக்கிறார்கள். ஆனால் தமிழ் வழியிலும் கற்பிக்கும் வாய்ப்பு இருந்திருந்தால் இன்னும் பற்பலர் இருந்திருப்பார்கள் எனத் துணிவாக நாம் கூறலாம்.

அயல்மொழி என்னும் தடைச்சுவரைச் சிலர் எளிதில் தாண்டியிருக்கலாம். இவர்கள் நெறி விலக்குகள். விலக்குகளே என்றும் நெறிகளாக மாட்டா. இந்தத் தடைச் சுவரைத் தாண்ட இயலாதவர்களே ‘பலர்’ என்பதை நாம் மறக்கக் கூடாது.

‘அயல் மாநில வேலைவாய்ப்புப் போய்விடும் தமிழில் கற்றால்’ எனவும் சிலர் வருந்துகிறார்கள். இஃது ஒரு மாயை.

அயல் மாநிலங்களில், அம் மாநில மாணவர்களுக்கு முதலிடம் தருவதே எல்லா இடத்திலும் நடைமுறையில் உள்ளது பெயருக்காக, 500 பேர் எடுக்கப்படும் இடத்தில், அயல் மாநிலத்திற்கு இரண்டிடம் ஒதுக்குவார்கள். அந்த இரண்டிடமும் அங்கேயே வாழ்ந்து வரும் அயல்மாநிலத்தவருக்குத்தான் வழங்கப்படும். போய்வருபவர்களுக்கோ வழிச் செலவு ஆவதுதான் மிச்சம்.

அப்படியே கிடைப்பதாகக் கொண்டாலும், இந்தியாவில் எங்குமே ஆங்கிலத்தை விரும்பாத போக்கு வளர்ந்துவிட்டுள்ளது.

Scanned with CamScanner

அந்த அந்த மாநில மொழியை அறியாமல் எங்கும் எந்த வேலையும் பார்ப்பது கடினம். தெலுங்கு தெரியாத ஒரு மருத்துவர் ஆந்திராவில் மக்களுக்கு மருத்துவம் பார்க்க முடியுமா? ஒரியா தெரியாத ஓர் அலுவலர் ஒரிசாவில் அலுவல் பார்க்கக் கூடுமா? எனவே, வெளி மாநிலம் செல்பவர்கள், செல்வதற்கு முன்பாக அந்த மாநில மொழியைக் கற்றுக்கொண்டு போக வேண்டும். வெறும் ஆங்கிலம் மட்டும் தெரிந்திருந்தால் போதாது. கல்வி அறிவை ஒருவர் எந்த மொழி மூலமாகவும் பெற்றிருக்கலாம். ஆனால் பணியாற்றும் போது, பணியாற்றும் வட்டாரத்து மக்களின் மொழியை அவர் அறிந்து கொண்டிருக்க வேண்டும்.

ஈரானிலிருந்து சில மாணவர்கள் இங்கு வந்து கல்வி பயில்கிறார்கள். இவர்கள் அனைவரும் பாரசீக மொழி மூலம் தான் அங்கே கற்றார்களாம். இந்தியாவுக்கு மேற்படிப்புக்கு வருவது உறுதியான பின்புதான் குறுகிய கால ஆங்கிலப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டார்களாம்.

ஏன் இந்தியாவிலிருந்து பற்பல இளைஞர்கள் சோவியத்து நாட்டிற்கும் செர்மனிக்கும் படிக்கவும், வேலை பெறவும் செல்கிறார்கள். அங்கெல்லாம் ஆங்கிலம் பயன்படுவதில்லை. சென்ற உடனே முதலில் ஆறு மாதம் அல்லது ஓர் ஆண்டுக்காலம் அங்குள்ள மொழியான உருசியன் அல்லது செர்மன் மொழியைக் கற்குமாறு பணிக்கப்படுகிறார்கள். மொழியியல் முறையில் எந்த மொழியையும் விரைந்து கற்கும் வழிமுறைகள் பல நடைமுறைக்கு வந்துள்ளதால், மொழி கற்பது என்பது இன்று ஓர் எளிய செயல். எனவே, அங்குச் சென்றவுடன், அம் மண்ணுக்குரிய மொழியைக் கற்றுக் கொண்ட பின்னே உயர் கல்வியைத் தொடர்கிறார்கள்; அல்லது பணியில் அமர்கிறார்கள்.

ஆனால் நம் மாநிலத்தில் நம் மொழியில்தான் கற்றேயாக வேண்டும் என யாரையும் நாம் வற்புறுத்துவதில்லை. தமிழில் கற்க விரும்புகின்றவர்களுக்கு மட்டுமே வாய்ப்பினை ஏற்படுத்தித் தர விரும்புகிறோம். இதைப் பிறழ உணர்ந்து கொண்டு நல்லவர்கள் சிலர் பதற்றம் கொள்வது தேவையில்லாதது.

இந்திய மொழிகளைக் கற்பதற்குக் கூட இன்று மொழியியல் நோக்கிலான மிக எளிய ஆனால் செப்பம்மிக்க வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மைசூரிலுள்ள இந்திய மொழிகள் நிறுவனம் ஆண்டுதோறும் இந்தியக் கல்வியாளர்களுக்குத் தாய் மொழியல்லாத ஒரு மொழியைத் திறம்படக் கற்பித்து வருகிறது. அரிச்சுவடிப் பாடத்தில் தொடங்கிப் புலமையறிவு வரை ஓராண்டுக் காலத்திலேயே கற்பித்து விடுகிறது.

இத்தகு அறிவியல் முறைகளெல்லாம் வளர்ந்திருக்க, நாமோ இரு மொழி மும்மொழி என அச்சுறுத்தியே மாணவர்களைக் குழப்பி வருகிறோம். கட்டாயப்படுத்தி அதிக மொழிகளை ஒரு

சேரப்படிக்கச் சொல்வதுதான் பரந்த மனப்பான்மை என நம்பி வருகிறோம்.

இளம் பிள்ளைப் பருவத்தில் தாய்மொழி மட்டுமே கற்பிக்கப்பட்டுப் பிழையறப் பேசவும் எழுதவும் கருத்துகளை வெளியிடவும் அதில் மாணவன் திறமை பெற்றால், பின்பு எந்த மொழியையும் அவன் சுமையின்றிக் கற்பான். குழந்தைப் பருவத்திலேயே முரண்பட்ட மொழிகளைத் திணிக்கும்போது அறிவு பெறும் திறம் அவனிடம் குன்றிப் போகிறது. பாடம் கற்கும் மொழியே மாறும்போது, அவன் வெறும் ஒலிப்பதிவுத் தட்டாக மாறுகிறானேயில்லாமல், சிந்திக்கும் மாந்தனாக மலர்வதில்லை.

கல்விச் செயற்பாட்டில், அந்தந்த மாநில மொழியே அதிகம் முதன்மை பெற்றிருக்க வேண்டும். அந்த மொழியில் மாணவன் எல்லாக் கல்வியும் பெற வாய்ப்பிருக்க வேண்டும். அவன் அத்துறையில் தேர்ந்து திறமை பெற்றபின், அவன் விரும்பும் மொழியை விரைவாகக் கற்றுக் கொள்வதற்கு, மொழியியல் முறையிலான 'மொழிக் கல்வி' நிலையங்கள் (மைசூரில் உள்ளது போல்) பல இடத்திலும் இருக்க வேண்டும். இந்திய மொழியோ, அயல்நாட்டு மொழியோ, எதையானாலும், விரைந்து கற்றுக் கொண்டு விரும்பிய பகுதிக்கு விரும்பிய இடத்திற்குப் போகலாம்.

மொழியைக் கண்டு சினம், மொழியைக் கண்டு அச்சம், மொழியைக் கண்டு கவலை, மொழியைக் கண்டு வெறி, மொழியைக் கண்டு பகை—இவையாவும் இந்தியாவின் கோணற் போக்குகள்: இவை உருவாக்கப்பட்டவை. எவனொருவனையும் தாய்மொழியை நேசிக்கவும், அதில் அறிவு பெறவும் அனுமதித்து விட்டால், அவன் எல்லா மொழியையும் நேசிப்பான்; பல மொழிகளைக் கற்க முயல்வான். அதற்கு அனுமதிக்காத வரை அறிவியல் நோக்கற்ற அணுகுமுறைகளே குழப்பம் செய்து கொண்டு இருக்கும்.

0

"தென்மொழி"

சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல்நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம் :	15 உருபா	35 உருபா	40 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	8 ,,	18 ,,	25 ,,
தனியிதழ் :	1.25 ,,	3-00 ,,	4.00 ,,

ஓரிதழுக்கு உருபா 2-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

மெய்யெனக் கூறு நெஞ்சே!

பாவலர். வள்ளிகேள்வன், ஈரோடு

1. நாவலம் மதிவலம் நாளெலாம்
உழைத்திடும் நல்ல மாண்பும்
தீவலம் போலுமெய்க் கருத்துரை
யாவையும், செம்மை யான
சீர்வலந் செறிந்துநம் தமிழினம்
மீளவே தெளிந்து தந்தான்
பாவலர் ஏறுநம் காவலன்
என்றினிப் பாடு நெஞ்சே!

2. துயின்றிடும் போதிலும் உண்ணுமப்
போதிலும் தொடர்ச்சி யாகப்
பயணஞ்செய் போதிலும் பழகிடும்
போதிலும் பாடு பட்டே
முயன்றிடும் போதிலும் தமிழினம்
மீட்பதே முகாமை என்றுன்
அயர்விலா நம்பெருஞ் சித்திர
னார்திறம் அறிக நெஞ்சே!

3. எழுதினுல் பணம் புகழ் சேருமென்
றெதையுமே எழுத வில்லை!
பழுதிலா மதியொளி! பாழ்நிலப்
பொட்டலில் பாய்ச்ச வில்லை!
விழுதென இறக்கினன் தமிழ்நிலம்
தன்னிலே விடுத லைக்கே!
பிழையிலாப் பாவலர் ஏற்றினைப்
பெற்றேமென்(று) அறைக நெஞ்சே!

4. மேடைகள், மாலைகள் ஆரவா
ரங்களை வெற்று வேட்டுச்
சோடைபோம் கோழைகள் நாடுவார்;
தருக்குவார். தூய பாதை
நாடிய சித்திரன் நாட்டுவான்
வெற்றியை நானி லத்தில்!
பிடுறத் தமிழ்ச்சுடர் ஏற்றுவான்!
மெய்யெனக் கூறு நெஞ்சே!

மக்களைக் கொன்ற கொடியவர்கள்!

1. கிளாசு பார்பி

ஏப்ரல் 1944 அந்தச் சிறுமியின் பெயர் லில்லியன் கொன் சுடின், அவளுக்கு அப்போது அகவை 11. அவளது முகத்தில் புன்னகையில்லை; மகிழ்ச்சியில்லை. கண்களில் அச்ச மருட்சிதான் காணப்பட்டது. அவளுடன் வாழ்ந்த 41 குழந்தைகளும் கூட அதே போன்றுதாமிருந்தன. அக்குழந்தைகள் அனைத்தும், பிரான்சு நாட்டின் லையான்சு நகருக்கருகேயுள்ள ஒரு சிற்றூரில் ஒரே வீட்டில் நாசிகளிடமிருந்து மறைந்து வாழ்ந்து வந்த யூதக் குழந்தைகள்.

சிறுமி லில்லியன் கடவுளுக்கு ஒரு கடிதம் எழுதினுள்; 'என் வாழ்க்கை இதற்குமுன் நன்ருகவே இருந்தது. அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். . . கடவுளே, உன்னிடம் ஒரே ஒரு வேண்டுகோள்... என் பெற்ருேர்களை எப்படியாவது காப்பாற்று.'

ஒரு சில நாள்களுக்குப் பின்னர், அந்தச் சிறுமியும், அவளு டன் இருந்த அத்தனைக் குழந்தைகளும் கண்டுபிடிக்கப்பட்டு, ஆசுவிட்சு உடல்சிதைவுக் கூடத்திற்கு அனுப்பப்பட்டனர். குழந்தைகளின் தலைகள் அனைத்தும் மொட்டையடிக்கப்பட்டு, நச்சுவளிக் கொட்டடியில் அவர்கள் செத்து மடிந்தனர்.

அன்று அக்குழந்தை தப்பிப் பிழைத்திருந்தால், இன்று 52 அகவைப் பெண்ணுக நடமாடிக் கொண்டிருப்பாள். ஆனல் லில்லி யன் கொன்சுடீன் இன்று ஒரு வெறும் புள்ளி விளத்தமே. பிரான்சு நாடு நாசிகளின் வல்லாளுமையில் இருந்த காலத்தில் லையான்சு நகரத் தலைமை அதிகாரியாகவிருந்த அரக்கன், கிளாசு பார்பி என்ற விலங்கின் வெறிச் செயல்களுக்கு இரையான பல்லாயிரம் பேரில் லில்லியனும் ஒருத்தி. அவ்வளவே.

கிளாசு பார்பியை, 'லையான்சு நகரக் கொலையாளி' என்றே மக்கள் அழைத்தனர்; பிரெஞ்சு யூதர்களையும் பாசீச—எதிர்ப்பு இயக்கப் படையினரையும் ஆயிரக் கணக்கில் கொன்று குவித்த மாபாவி அவன். பிரான்சு நாட்டின் மிகவுயர்ந்த எதிர்ப்பு இயக்க வீரரான சீன் மான்டினைக் கொலை செய்ததும் கிளாசு பார்பி. 4000 பேர்களை அவன் அந்த நாட்டிலேயே கொன்று தீர்த்தான். 7000 யூதர்களை ஆசுவிட்சு நச்சுக்காற்றுக் கொட்ட டிக்கு அனுப்பி வைத்தான். 14000 எதிர்ப்பு இயக்க வீரர்களைத் தளை செய்து, நாடு கடத்தினுன். கடத்தப்பட்டவர்கள் என்ன ஆனுர்கள் என்பதே தெரியவில்லை. அவர்கள் 'மறைந்து' விட்டனர்.

இந்தக் கொலைகாரன் எப்படியோ நயன்மையின் கைகளி லிருந்து தப்பிவிட்டான். எப்படித் தப்பியிருப்பான் என்பதை நாம் இங்கு விளக்கத் தேவையில்லை. அந்தக் கொலைகாரன் எதிர் காலத்தில் தங்களுக்கு உதவக்கூடும் என்று எண்ணிய அமெரிக்க

படைத்துறையினருடன் பேரம் பேசி உடன்பாடு கண்டிருக்க வேண்டும். உண்மை என்னவெனில், அந்த மாந்த — அரக்கன் பொலிவியா நாட்டில் பாதுகாப்பாக வாழ்ந்து வந்தான். இரண்டாண்டுகளுக்கு முன்னர்தான் அது கண்டுபிடிக்கப்பட்டது. மாந்தகுலத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு அவன் மீது உசாவல் நடத்தி, அவன் தண்டனைக்குட்படுத்தப்பட வேண்டும் என்று பிரான்சு மக்கள் கிளர்ச்சி நடத்தியதால் அவன் பொலிவியாவிலிருந்து பிரான்சு நாட்டுக்குக் கட்டாயமாகக் கொண்டு வரப்பட்டான்.

போருக்குப் பிந்திய காலத்தில் நடந்துள்ள நயமற்ற கொடுமைகளுக்கு லையான்சு நகரக் கொலைகாரன் தப்பியோடியது ஓர் எடுத்துக்காட்டாகும். எத்தனையோ நாசி பச்சைக் கொலைகாரர்கள் அமெரிக்க ஆளுமையின் பாதுகாப்புடன் மேலை நாடுகளுக்கு ஓடி, அங்கு இன்றளவும் சொகுசாக வாழ்ந்து வருகின்றனர். அத்தகைய கொடியவர்களில் எவனேனும் ஒருவனாவது சோவியத்து ஒன்றியத்துக்குத் தப்பிச் செல்ல முயன்றிருப்பானா? ஏனெனில், தாங்கள் செய்த பெரும் கொலை வெறிச் செயல்களுக்காக நயன்மையின் கைகளிலிருந்து தப்ப முடியாது என்பதை அவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர்.

கிளாசு பார்பிக்கு இப்போது 71 அகவை. பிரான்சு நாட்டில் அவன் அறமன்ற உசாவலை, எதிர்நோக்கிக் கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறான். அவன் மீது உசாவல் இவ்வாண்டு அக்டோபர் அல்லது நவம்பரில் தொடங்கவிருக்கிறது. அவன் மீது வெளிப்படை உசாவல் நடத்தினால், அவனுடன் அன்று ஒத்துழைத்து, இன்று பிரான்சில் பெரும்புள்ளிகளாக உயர் பதவியில் இருப்பவர்கள் பலரின் பெயர்களை, அவன் வெளியிட்டு விடுவானோ என்ற அச்சமும் பிரான்சில் உள்ளது. அதனால்தான் உசாவலை ஒத்திப் போட்டுள்ளனர். ஒருவேளை அதற்குள் அவன் இயற்கைச் சாவும் அடையக் கூடுமல்லவா?

'அந்தக் கொலைகாரனிடம் துளிகூட, தான் புரிந்த கொடுமைகளுக்கான வருத்தம் தென்படவில்லை', என்று அவனது வழக்கறிஞர்கள் கூறுகின்றனர், அவன் ஏன் வருந்தப் போகிறான்? 40 ஆண்டுகளாகத், தன்னைப் பேணிப்பாது காத்து வந்த மேலைய உலகின் தலைவர்கள் எத்துணை வஞ்சக உள்ளம் படைத்தவர்கள் என்பது அவனுக்குத் தெரியாதா, என்ன?

கிளாசு பார்பியினால், சாவுக் கொட்டடிக்கு அனுப்பப்பட்ட ஆயிரம் ஆயிரம் பேர்களது சாவம் அவனைப் பிடித்திருந்த போதும், நாசி வெறியர்களைப் பாதுகாப்பவர்களின் வாழ்த்துகள் அந்தச் சாவத்தினைக் காட்டிலும் வலிமையுடையதாகவிருப்பது, வெட்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

— ஏ. எசு. எம்

(அட்டை 2-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

இதுகாறும் ஒன்றும்செய இயலவில்லை. ஐயா, அவர்கள் பொருத்தருளவும். விரைவில் தொகை விடுக்கிறேன்.

தங்கள் பணிப்பிற்கிணங்க 'தமிழ் விடுதலை வன்கந்தக' வேலையகம், 'வட்டகம், வளிப்பம் வன்கந்தம் செய்யப்படும்' (டயர், டீயூப் வல்கனைசிங் செய்யப்படும்)', என்று மேற்சொன்னவாறு விளம்பரப்பலகை ஒன்று எழுதி விரைவில் நாட்டஞ் செயவுள்ளேன்.

தொழில் தொடங்குங்கால் ஐயா, அவர்களை அழைத்து ஆவன செய்யவுளோம். ஆதலின், தாங்கள் அதுகால் வருகை தந்து சிறப்புச் செய்ய வேண்டுகிறேன். நன்றி வணக்கம்.

இப்படிக்கு, தங்கள் அன்புள்ள அடியான்,
வே. இரா. அரங்கராசு, திருச்சி-2.

0: 1076 : முழுமைத் தமிழறிந்த மூப்பில்லா' என்தலைவா!
மூன்றுதமிழ் உலாப்புரிய முன்நெறியைக் கண்டவரே!
எழுகின்ற ஞாயிறெனத் தமிழரைப் பாடுபட்டு
இனிக்கின்ற பைந்தமிழே பாவலரே றேவணக்கம்!
உழவனுக உழைக்கும் உண்மையுடைச் செஞ்சுடரே!
உவகையுடன் உங்களுடை தொண்டேற்கும் எங்களுக்கு
மொழியுணர்வை ஊட்டுகின்ற உயர்தமிழின் பெட்டகமாய்
மூதறிஞ ராய்த்திகழும் என்தலைவா! வணக்கமய்யா!
— அன்புடன், கோவி. இளஞ்சேரன், சென்னை-45.

0: 1077 : அன்புடையீர்! வணக்கம். தங்களின் மென்மையான தமிழ் உள்ளத்திற்கு எனது இனிய, கனிந்த பணிவான பண்பான நன்றிகள்.

சுவடி-21. ஓலை-5. தென்மொழி இதழில் 'திருவள்ளுவர்' படத்தை வெளியிட்டுள்ளீர்கள். கூடவே அது குறித்துக் கட்டுரை ஒன்றையும் எழுதியுள்ளீர்கள்.

ஆறுவது அறிவு இருப்பதே எதனையும் பகுத்துப் பார்த்திட, சிந்தித்துச் செயல்பட என்பதில் இருவேறு கருத்துகள் எனக்கில்லை. ஆயின் இன்றைக்கு நம் தமிழ் மக்களின் முன்னால் 'தமிழீழ'ச் சிக்கலைப் போன்ற பல்வேறு முகாமையான கோரிக்கைகள் நிறைந்தே இருக்கின்றன. அவற்றைத் தீர்த்திட வழிவகைகளைத் தெரிவித்துத் 'தென்மொழி'யில் கட்டுரைகள் வெளிவருவதும், வர இருப்பதும் பாராட்டப்படவேண்டியது. தேவையான நன்று ஆனால்!

இன்றைக்கு எல்லோராலும் ஏறக்குறைய ஒப்புக்கொள்ளப் பட்டுவிட்ட "வள்ளுவர் படம்" சரியில்லை, இதோ இங்கு வெளியிட்டுள்ள படம்தான் சரியான வள்ளுவர் படம் என்று இன்றைக்குத் தேவையில்லா ஒரு செய்தியை இசைப்பாட்டோடு தொடங்கிட வேண்டுமா?

இன்றைக்கு, இப்போது வெளியிட்டுள்ள படம் சரி, நாளைக்கு இன்னொரு படம் கிடைத்தால் அது சரி என்கிற முறையில் நம் எண்ணங்களைச் சிதறடிப்பது சீர்மையான செயல்தானா?

உங்கள் பட்டறிவுக்கு முன்னால் எனது பட்டறிவு ஒரு விழுக்காட்டைவிடக் குறைவுதான் என்றாலும் என் சிந்தனையில் விழுந்த கோடுகளை எழுத்துகளாக்கி உங்களுக்கு அனுப்பியுள்ளேன்; மிக்க நன்றி. — ப. மூர்த்தி, பெங்களூர்-22.

(தொடர்ச்சி அட்டை 4-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

0: 1078 : பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம். கொற்கைத் தமிழ் மன்றம் நடத்திய சிலை திறப்பு விழாவும், தென்மொழி கும்பம் மாத இதழில் அணி செய்யும் திருவள்ளுவர் திருவுருவப் படமும் என்னுள்ளத்தில் ஒரு கருத்தினைத் தோற்றுவித்துள்ளன. அஃது யாதெனில் திருவள்ளுவருக்கு உருவப்படம் தேவையா என்பது தான். இதற்குமுன் பன்முறை திருவள்ளுவர் உருவப்படத்தைப் பார்த்திருப்பினும் அப்பொழுதெல்லாம் இக்கருத்து தோன்ற வில்லை.

திருவள்ளுவரின் மெய்யான வரலாறு கிடைக்கவில்லை. இனி கிடைக்கும் என்பதற்கான அறிகுறியும் இல்லை. நமக்குக் கிடைத் திருப்பதெலாம் திருக்குறள் ஒன்றுதான். 2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருவள்ளுவரின் உருவம் எவ்வாறு இருந்திருக்கும் என்று அறிய வழியில்லை. தற்போதுள்ள திருவள்ளுவரின் உருவப் படமும், சிலைகளும் கற்பனை செய்து வரையப்பட்ட, செதுக்கப் பட்டவையேயாகும். அஃதாவது எண்ணற்ற இந்து சமயக் கடவுளரின் உருவங்களைப்போல கற்பனை செய்து வரையப்பட்ட உருவத்தைப்பார்த்து இவர்தாம் திருவள்ளுவர் என்று எண்ணுவது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதாகும். இஃது இந்து சமயத்தின் தாக்கமே என்று கருதுகிறேன். உருவ வழிபாட்டுப் பழக்கத்திற்கு அடிமையாகிப்போன தமிழர்களைத் திருத்தவே முடியவில்லை.

எதற்கும் உருவத்தை முன்வைத்துப் பார்த்துப் பழக்கப்பட்ட தமிழர்கள் திருவள்ளுவரின் உருவத்தைப் படைத்துவிட்டார்கள். தமிழ்த்தாய் உருவச் சிலையும் இத்தன்மையதாகும். தமிழ் ஒரு மொழி. இதற்கு உருவம் ஏது? ஆனால் தமிழ்த்தாய் என்றுகூறி இதற்கும் ஒரு சிலையைப் படைத்துவிட்டார்கள். தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பாடுபடுவதே தமிழரின் தலையாய கடமையாகும். அதை விடுத்துத் தமிழ்த்தாய் சிலை வைப்பதால் தமிழ் வளர்ந்துவிடாது.

மேலும், இவ்விதழில் 'தமக்குள் ஒற்றுமை இல்லை' என்று மனம் குமுறி இருக்கின்றீர்கள். ஒற்றுமை உருவாகும் வழியை ஆராய்வது தேவையாகும். தமிழர்களுக்குப் பொதுவான திருமண முறை, இறந்தவர்களை அடக்கம் செய்யும் முறை ஆகியவை ஒற்றுமையை உருவாக்க வழி வகுக்கும். ஆனால் அது மட்டும் போதாது. பொருளியல் ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதே முதன்மையாகும்.

மொழியின் அடிப்படையில் இனம் ஒன்று சேருவதற்குத் தடையாக இருப்பது பொருளியல் ஏற்றத்தாழ்வுதான். பெரும் பாலான மக்கள் அன்றாடம் கஞ்சிக்கே ஆலாய்ப் பறக்கும்போது மொழியின் சிறப்பையும் பெருமையையும் ஒற்றுமையின் தேவை யையும் உணர்ந்து ஒன்று சேருவார்கள் என்று எதிர்பார்ப்பது இந்தத் தலைமுறையில் மட்டுமன்று எந்தத் தலைமுறையிலும் நடவாது. வெல்க தமிழினம்! தங்கள் அன்புள்ள,

— செந்தமிழ்வாணன், கீரனூர்-622502

தென்மொழியின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)